விலை சதம் 5 | பக்கங்கள் 8

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)

REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்

தனிப் பிரதி	சதம்	5
3 மாதச் சந்தா	ரூ.	6-00
6 மாதச் சந்தா	"	12-00
1 வருடச் சந்தா	"	24-00

மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone 3411

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து வரு ஐப்பசி மீ 16உ ஞாயிற்றுக்கிழமை Colombo, November, 2 1947 — ஹிஜிரி 1366 துல்ஹஜ் பிறை 18 | இதழ் 152

உங்கள் தேவைக்கான

சாப்புச் சாமான்கள், புட்டி மருந்துகள், பால் உணவுகள், டின் ஆகாரவகைகள், இங்கிலிஷ் பிஸ்கெட்டுகள் ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் நிதானமான விலையில் கிடைக்கும்.

கே. எம்.
அரிசிமியாப்பிள்ளை & சன்ஸ்,
347, மெயின் ஸ்டிரீட்,
கொழும்பு.
டெலிபோன்: 4586

ஓடிட்டர் ஜெனரலின் 1946-47 வருட அறிக்கை எங்கே?

"பொக்கிஷ இலாகாவின் தாமதம்" என்கிறார் அலன் ஸிமித்

["சுதந்திரன்" அரசியல் நிருபர்]

கொழும்பு, நவ. 2

இலங்கை ஓடிட்டர்-ஜெனரலின் வருடாந்த அறிக்கை ஆகஸ்ட் மாத முதல் இரண்டு கிழமைகளில் வெளியிடப்படுவது வழக்கம். ஆயின் 1946-47ம் ஆண்டு அறிக்கை மாதங்கள் மூன்றுக்கு மேற்பட்டும் இன்னும் வெளிவரவில்லை?

நான், ஓடிட்டர்-ஜெனரல் திரு. அலன் ஸிமித்தை, இவ் வருட அறிக்கை வெளிவருவதற்கு ஏன் இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்று கேட்டபொழுது, அவர் "முக்கியமாகப் பொக்கிஷ இலாகாவின" கணக்குகளும், பொதுவாக மற்றும் சில இலாகாக்களின கணக்குகளும் தமக்கு வருவதற்குச் சுணங்கியபடியாறதான் அறிக்கையை வெளிப்படுத்துவதில் தாமதமேற்பட்டுளளது என்று கூறினார்.

மேலும் திரு ஸிமித் எமக்குக் கூறியதாவது:—

"சில இலாகா கணக்குகள் அரசாங்க அறிக்கைகளாக வெளியிடப்பட்டுள்ளன. ஆயின் எல்லா இலாகாக்களின் கணக்குகளும் வரும்வரைக்கும் எனது அறிக்கையை வெளிப்படுத்துவது என்பது முடியாத காரியமாகும். சென்ற வருடத்தில் ஜூலை மாதத்திலேயே எல்லா அரசாங்கக் கணக்குகளும் எம்மிடம் வந்துள்ளன. அதன் பலனாக ஆகஸ்டு மாதத்தில் இரண்டாவது கிழமையிலேயே எனது அறிக்கையை வெளியிட்டேன்."

நான் திரு. ஸிமித்தை "எப்பொழுது நீர் அறிக்கையை வெளியிடுவீர்" என்று கேட்டதற்கு அவர்:-"மிகவும் சமீபத்தில். ஒரு வேளை நவம்பர் மாதத்தில்" என்று பதிலளித்தார்.

பழைய டொனமூர் அரசியல் திட்டத்தின்படி ஓடிட்டர் ஜெனரலின் அறிக்கை கவர்னருக்கும் அரசாங்க சபைக்கும் சமர்ப்பிக்கப்பட்டது. ஆயின் இப்பொழுது பாராளுமன்றப்பிரதிநிதிகள் சபைக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஆகவே திரு. அலன் ஸிமித் தமது 1946-47ம் ஆண்டு அறிக்கையை பிரதிநிதிகள் சபையின் தலைவரிடம் சமர்ப்பிப்பார்.

"தபாற்கந்தோர் சேமிப்பு இலாகாவில் பல ஆயிரம் ரூபாய்கள்," சில காலத்திற்கு முன்பு மோசடி செய்யப்பட்டது சம்பந்தமாக நீர் உமது விசாரணைகள் ஏதாவது நடத்தியிருக்கிறீரா?" என்று திரு. அலன் ஸிமித்தை நான் கேட்டேன்.

திரு. அலன் ஸிமித் ஒரு விசாரணைச் சபையினர், அது சம்பந்தமாக விசாரணைகள் நடத்துவதாக எமக்கு பதில்கூறினார்

இவ்விதமான மோசடிகள் அரசாங்க இலாகாக்களில் வெளிவரும்பொழுது ஓடிட்டர் ஜெனரல்தான் அப்பிழை செய்த இலாகாவில் பாய்வது வழக்கம் என்று திரு. ஸிமித்திடம் நான் குறிப்பிட்டபொழுது; திரு. ஸிமித், "அப்படியாக நடத்தவேண்டுமென நான் எண்ணிய விசாரணைகள் யாவும் இந்தச் சந்தர்ப்பத்தில் செய்யப்பட்டுவிட்டன" என்று பதில் கூறினார்.

சென்ற மூன்று மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற இம் மோசடி சம்பந்தமான விசாரணைகள் இன்னும் முற்றுப்பெறவில்லை. இம்மோசடி நடைபெற்ற காலத்தில் பொதுச்சபால் கந்தோர் உதவி 'அக்கவுண்டன்ட்" ஆகக் கடமையாற்றிய திரு. பி. டபிள்யூ. கோல் இப்பொழுது பதில் ஓடிட்டர் ஜெனரலாகக் கடமையாற்றுகிறார்.

சர்வதேச வர்த்தக மகாநாடு

அழைப்பை ஏற்க ரஷியா மறுப்பு

வாஷிங்டன், அக். 31

ரஷியா, யூகோஸ்லாவியா பல்கேரியா முதலிய 8 நாடுகள் சர்வதேச வர்த்தக மகாநாட்டுக்கு அனுப்பப்பட்ட அழைப்பை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டன.

உக்ரைன், பைலோ-ரஷியா அபிசீனியா, சவூதி அரேபியா, சயாம் என்பன அழைப்பை மறுத்த இதர நாடுகளாகும்.

(ரா ய்ட்டர்)

பொது மக்கள் தரிசனத்துக்கு சாஞ்சி அஸ்தி

டிஸம்பரில் மீண்டும் வைக்கப்படலாம்

கண்டி, நவ. 1

தலதா மாளிகையின் புதிய திசவடன நிலமேயாகத் தெரியப்பட்ட திரு ஸி. பி. நுகவெல தமது பதவியை ஏற்றதுடன் டல வேலைகளையும் கவனிப்பதில் மனதைச் செலுத்தி வருகின்றார். நவம்பர் 5-ம் தேதியே இவர் தமது பதவியை அதிகாரபூர்வமாக ஏற்றுக்கொள்வார். இப்பொழுது இலங்கையில் இருக்கும் சாஞ்சி அஸ்திகளை டிஸம்பரில் பொது மக்கள் தரிசனத்திற்கு வைப்பதுபற்றியும் இவர் ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

பாலஸ்தீன் பிரிவினைக்கு ஐக்கிய அமெரிக்கா புதிய திட்டம்

"சாயல் அரசாங்கங்களை யூதர்களும் அராபியர்களும் ஏற்படுத்துக"

இடைக்காலத்தில் பிரிட்டிஷார் பாலஸதீனில் தங்குவார்களா?

லேக்ஸக்ஸஸ் (நியூயார்க்) நவ. 1

பாலஸ்தீனில் யூத, அராபிய தனியாட்சி நாடுகளை 1948-ம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் தேதியன்று ஏற்படுத்துவதற்காக ஐக்கிய அமெரிக்காவால் கூறப்பட்ட ஆலோசனைகள், பிரிட்டன், பாலஸ்தீனில் இடைக்காலத்தில், ஆட்சிசெலுத்தினால்தான் சாத்தியமாகுமென்று இங்குள்ள விஷயமறிந்த வட்டாரங்களில் நம்பப்படுகிறது.

பிரிவினை-உப கமிட்டியின் கூட்டத்தில் திரு ஹேர்ஸசெல் ஜோன்சன் ஐக்கிய அமெரிக்காவின் நிலைமையை பூரணமாக வெளிப்படுத்தியுள்ளார் என்று நம்பத்தகுந்த வட்டாரங்களில் கூறப்படுகிறது.

பாலஸதீனம் பிரிக்கப்படும் இடைக்காலத்தில்நாட்டில்சமாதானத்தை நிலை நாட்டுவதற்கு அராபிய அரசாங்கமும் யூத அரசாங்கமும் ஆறுமாத காலத்திற்கு தங்கள் தங்கள் பாதுகாப்புப் படைகளை ஸதாபித்துக் கொள்ள வேண்டுமென்றும் ஐக்கிய அமெரிக்கா ஆலோசனை கூறியுள்ளது.

உயர்தர- இரகசிய உப கமிட்டி இன்று காலையில் கதவுகளில் பலத்த காவல்கள் வைக்கப்பட்டு நடைபெற்றது.

பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு மந்திரி திரு ஆர்தர் கிரீச்ஜோன்ஸ இக்கூட்டத்தில் பார்வையாளராகப் பிரசன்னமாகியிருந்தார்.

ரஷியர்கள், பாலஸ்தீனின் இடைகால அரசாங்கம் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்ஸிலின் பராமரிப்பில் இருக்க வேண்டுமென்று கேட்டுள்ளனராம். ஆயின் ஐக்கிய அமெரிக்கா, அதைப் பொதுச் சபையிடமே விட்டுவிட வேண்டுமென்று கூறியுள்ளதாக அறியப்படுகிறது.

திரு ஜோன்ஸ பாலஸதீன் பிரிக்கப்படுவது சம்பந்தமாகக் கூறிய மற்றும் ஆலோசனைகளாவது:-

1. இப்பொழுது தொடக்கம் ஜூலை வரைக்கும் உள்ள இடைகாலத்தில் ஐக்கியநாடுகள் ஸதாபனத்தின் பொதுச்சபை, மூவர் அடங்கிய ஒரு கமிஷனை பாலஸதீனை மேற்பார்வை யிடுவதற்காக நியமிக்கவேண்டும்.

2. இடைக்காலத்தில் சமாதானத்தையும், நீதியையும் நிலைநாட்டுவதற்கு பிரிட்டிஷ் படைகள் பொறுப் பேற்றுக்கொள்ள வேண்டும்.

3. இடைக்காலத்தில், யூதர்களும், அராபியர்களும் தங்கள் "நிழல் அரசாங்கங்களை" ஏற்படுத்திக் கொள்ளவும், பாதுகாப்புப் படைகளுக்கு ஆட்களைத் திரட்டிக்கொள்ளவும், வசதியளிக்கப்படவேண்டும்.

4. முன் அமெரிக்காவால் கூறப்பட்ட தொண்டர் படை ஏற்படுத்தும் பேச்சுகையில் இன்னும் சில மாதங்களுள் இலங்கை, எந்த நுட்பமாகப் பிழை பிடிப்பவனும் உண்மைச் சுதந்திரம் அல்ல என்று கூறமுடியாத அந்தஸ்தை அடைந்து விடும் என்று கூறினார்.

திரு பண்டாரநாயக்கா தொடர்ந்து கூறியதாவது:— "சிங்களவரும் தமிழரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும். இரு ஜாதியினருக்குமிடையில் பரஸ்பரம் அவநம்பிக்கையிருக்கவே கூடாது.

பிரதிநிதித்துவம் சம்பந்தமாகவுள்ள பிரச்னைகளை மீண்டும் சாதிப்பதால் பயனில்லை சிங்களவர்களுக்குள் சிங்களவராகியான் தமிழர் ஒற்றுமையை பெரிதும் விரும்புகிறேன். காரணம் எங்கள் தாய்நாடு எதிர்காலத்தில் பெரும் பிரச்னைகளைச் சமாளிக்கவேண்டியிருக்கிறது."

பின்பு யாழ்ப்பாணப் பிரதிநிதி ஜீ. ஜீ பொன்னம்பலமும், நகரசபைத் தலைவர் திரு. ஸி. பொன்னம்பலத்தடனும் திரு. பண்டாரநாயக்காவுடனும் கரை யூர்ச்சேரியை மோட்டார் வண்டியில் சென்று பார்வையிட்டனர்.

6. ஐக்கிய நாட்டு ஸதாபனத்தால் ஏற்படுத்த விருக்கும் கமிஷன் பொதுச் சபையின் ஆதிக்கத்தின் கீழ் இருத்தல் வேண்டும்.

பத்திரிகையாளர் மகாநாட்டில் திரு ஜோன்ஸன், ஐக்கிய அமெரிக்காவின் ஆலோசனைகள் பிரிட்டன் தனது படைகளையும், ஆதிக்கத்தையும், பொருட்களையும் கொண்டு வெளியேறுவதற்கு தக்க காலத்தைக் கொடுப்பதற்காகவே உத்தேசித்துக் கூறப்பட்டுள்ளதாகும் என்று கூறியுள்ளார்.

லேக்ஸக்ஸஸ், நவ. 1

1948 ஜூலை 1-ம் தேதி பாலஸ்தீனத்தில் யூத அரசாங்கம் ஒன்றையும் அராபிய அரசாங்கம் ஒன்றையும் நிறுவ வேண்டும் என்று கூறும் அமெரிக்க ஆலோசனை பிரிட்டனே இடைக்காலப் பாலஸ்தீன ஆட்சியை ஏற்று நடத்தும் என்ற நம்பிக்கையிலேயே செய்யப்பட்டிருக்கிறது.

இடைக்கால நிலைமைகளை மேற்பார்வை செய்ய பாதுகாப்புச் சபையின் மூவர் அடங்கிய கமிஷன் நிறுவப்படவேண்டும் என்று அமெரிக்கா கருதுகிறது.

ஐ. நா. சபை வட்டாரங்களில் இந்த ஆலோசனை பிரிட்டனால் ஏற்றுக்கொளளப்படும் என்றே எண்ணி வருகின்றன.

ஆனால் நிபுணர்கள் அமெரிக்க ஆலோசனை பிரிட்டனின் பாலஸ்தீனக் கொள்கைக்கு முரண்பட்டது என்று கருதுகின்றனர். குடியேற்ற நாட்டு மந்திரி சிறிது நாட்களுக்குமுன் செய்த பிரசங்கத்தில் பிரிட்டன் ஐ. நா. சபையின் முடிவை அமுல் நடத்தும் பூரண அல்லது பெரும் பகுதி பொறுப்பை ஏற்றுக்கொள்ள மாட்டாது என்று குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க ஆலோசனைப் பிரகாரம் பிரிவினையை அமுல் நடத்தும் பொறுப்பு முழுவதும் பிரிட்டனையே சார வேண்டியிருக்கும்.

அராபிய எதிர்ப்பு அதிகமாய் இருக்கும் என்றும் அதனால் பிரிவினையை அமுல் நடத்த அதிக சக்தியும் துணிவும் வேண்டியிருக்கும் என்றும் நம்பப்படுகிறது.

அயல் நாட்டு மந்திரி பெவின் பிரிவினையை ஒரு நீதியான முடிவென்று கருத வில்லை என்று சொல்லப்படுகிறது.

சோவியத் பிரதிநிதிகள் ஷை திட்டம்பற்றி எவ்வித அபிப்பிராயமும் கூறாது மௌனம் சாதிக்கின்றனர். யூத ஏஜென்ஸியும் தனது கருத்துகளை வெளியிடவில்லை.

சிங்களவர்-தமிழர் ஒற்றுமை

இலங்கையின் எதிர்காலச் செழிப்புக்கு அடிப்படை

திரு. பண்டாரநாயக்காவுக்கு யாழ்ப்பாணத்தில் அமோக வரவேற்பு

யாழ்ப்பாணம், நவ. 1

இன்று யாழ்ப்பாணம் புகை இரதஸ்தானத்தில் சுகாதார ஸதலஸ்தாபன மந்திரி திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கு யாழ்ப்பாண நகர மக்களின் சார்பாக, நகர சபை அங்கத்தவர்களாலும், தலைவராலும் ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது.



திரு பண்டாரநாயக்கா

புகை இரதஸ்தானப் நன்றாக அலங்கரிக்கப்பட்டு நிலத்தரைக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. நகர சபைத் தலைவர் திரு. ஸ. பொன்னம்பலம் திரு. பண்டாரநாயக்காவுக்கு மலர்மாலை சூட்டினார். ஸ்ரீமதி பண்டாரநாயக்காவுக்கு நகர சபை அங்கத்தவர் திரு. எஸ். பி. நடராசாவின் மகள் குமாரி மாலதி ஒரு பூச்செண்டை வழங்கியுபசரித்தார்.

திரு. பண்டாரநாயக்கா தமக்கு அளித்த வரவேற்புக்காக நன்றி கூறினார்.

திரு பண்டாரநாயக்கா மேலும் பேசியதாவது:- "இதுவே யான் யாழ்ப்பாணத்திற்கு முதலாவதாகச் செய்யும் உத்தியோகப்பற்றுள்ள விஜயம் யான் கரையூர்ச் சேரி ஒதிப்புத் திட்டத்தைப்பார்வையிடுவதற்கும், காங்கேசன்துறை ஆஸ்பத்திரிப் பிரச்னையை நேரில் பார்ப்பதற்காகவும் வந்துளேன் என்றாலும் உங்களுக்கு ஒன்று கூறாமல் இருக்கமுடியாது.

"இலங்கையின் எதிர்காலச் செழிப்பு செல்வப் பெருக்கம், எந்தோவம் ஆகிய யாவும், சிங்களவர்-தமிழர் ஒற்றுமையிலேயே மிகவும் தங்கியிருக்கின்றது."

வேலை நிறுத்தஞ் செய்த நாட்களுக்கு சம்பளம்

9 000 அரசாங்க ஊழியர்கள் பெறுவார்கள்!

புதிய நிதி மந்திரியின் உத்தேசம்

[நமது சொந்த நிருபர்]

கொழும்பு, நவ. 2

சென்ற ஜூன் மாதத்தின் அரசாங்கத் தொழிலாளர் வேலைநிறுத்தஞ் செய்திருந்த பதினொரு நாட்களுக்கும் பகிரங்க சேவையாளர் நிதிச் சட்டத்தின்படி சம்பளம் பெறமுடியாதிருந்தது.

இப்பொழுது புதிய நிதி மந்திரி அப்பதினொரு நாடகளுக்கும் வேலைநிறுததம் செய்தவர்களுக்கு அரைச் சம்பளம் கொடுக்கும்படி உத்தரவிட்டுள்ளதாக அறியப்படுகிறது. ஆகவே வேலைநிறுத்தஞ் செய்த 9000 தொழிலாளர்களும் அரைச் சம்பளம் பெறுவார்கள் என்று எண்ண இடமுண்டு.

நிதிச்சட்டத்தின்படி ஒரு மந்திரி இவ்விஷயங்களில தமது புததியைச் செலுத்திச் சட்டத்தை மாற்ற இடமிருக்கின்றது.

இன்னும் தினசரிச் சம்பளம் பெறற அரசாங்க ஊழியர்கள் வேலைநிறுத்தஞ் செய்ததால் பலர்வேலைகளினின்றும் நிறுததப்பட்டார்கள். அரசினரின் கீழ் காலியாயிருக்கும் வேலைகளுக்கு, அவர்கள் மனுச் செய்தால் முதல் ஸ்தானம் கொடுக்கப்படல் வேண்டும் என்றும் நிதி மந்திரி ஒரு அறிக்கையை வெளியிடுவாரென்றும் கூறப்படுகிறது. அவ்வறிக்கை வெளிவந்தால், ரதமலானை தொழில் நிலையம், பகிரங்கதொழிறசாலை, கொலன்னாவை எண்ணெய் நிலையங்கள், தோல் வேலைசெய்யும் நிலையங்கள் முதலிய வற்றில் வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலை கிடைக்கக்கூடும்.

மீண்டும் சட்டத் திருத்தம்

சோல்பரிக் கவுன்ஸில் திட்டத்தில 13-வது வதியில மூன்றாவது உப பிரிவை மாற்றியமைக்குப்படியாக ஒரு அவசரதந்தியை லண்டனிலுள்ள குடியேற்றநாட்டு மந்திரிக்கு அனுப்பியுள்ளதாக அறியப்படுகிறது. இந்த உப பிரிவு மாற்றப்படாவிட்டால் நான்கு மந்திரிகள் தங்கள் ஸதாபனங்களை இழந்துவிடுவார்கள் என்று எண்ணப்படுகிறது.

இவ்வருடம் ஆகஸட் மாதத்தில இப்பிரிவுகுடியேற்றநாட்டு மந்திரியால் மாற்றியமைக்கப்பட்டது. என்றாலும் அத்திருத்தம் திருப்திகரமாகவில்லையென்றே கூறப்படுகிறது.

பதவியிழக்கக்கூடிய மந்திரிகள் திரு. டி. எஸ். சேனநாயக்கா, திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகக்கா, திரு. ஜோர்ஜ். ஈ. டி. ஸில்வா, கேர்னல். ஜே. எல். கொத்தலாவல ஆகியோராவர்.

முன்பு மந்திரிகள் அரசாங்க உததியோகஸதர்கள் என்று சிலர் தர்க்கஞ் செய்தனர். அரசாங்க உததியோகஸதர்களாயிருந்தால் அவர்கள் பாராளுமன்றத தெரிவற்குப் போட்டியிட முடியாததாகும்.

1600 எஸடேட் தொழிலாளர் வேலை நிறுததம்

ரத்தினபுரி, நவ. 1

பாப்காடன், கல்கடுவா, கொஸகொல்ல, கராபுஞ்சா குருப் ஆகிய இடங்களில் உள்ள சுமார் 1600 தொழிலாளர் நேற்று முதல்வேலைநிறுத்தம் செய்கின்றனர். இன்று காலை 10 மணிக்கு திரு டி. எஸ் ஹெட்டியாராச்சி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில சிங்கள தொழிலாளர் வேலைநிறுததக் காரர்களுக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துளளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
THE "SUTANTIRAN."
194 C, கட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து ஹெ ஜயப்பசி மீ 16வ
ஞாயிற்றுக்கிழமை

உண்மைச் சுதந்திரம்-3

இலங்கைக்குக் கிடைக்கப் போவதாகவிருக்கும் சுதந்திரம் உண்மையில் தமிழனுக்குச் சுதந்திரமாகவிருக்குமா அல்லது தலைகீழாகி போய் திருகுவலியாகுமா என்பதே இப்பொழுது யோசிக்கவேண்டி வந்துவிட்டது ஒரு சமூகத்திற்குச் சுதந்திரமேற்பட்டிருக்கிறதென்று சொன்னால், அச் சமூகத்தின் பாஷை, கலைகள், நாகரிகம் முதலியவற்றை அபிவிருத்திசெய்து கொள்ளக்கூடிய வசதிகளிருக்க வேண்டும். பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் தமிழ்க் கலையும் தமிழ் நாகரிகமும் போய் ஆங்கில நாகரிகமும், ஆங்கிலக் கல்வியும் பரவுவதாயிற்று

டச்சுக்காரர்கள், போர்த்துகேசியர் காலத்தில் இலங்கை மக்கள் சங்கள் தங்கள் மதங்களையும், பெயரையும், உடைகளையும், நாகரிகங்களையும் மாற்றிகொள்ளவேண்டி வந்தது. இது கட்டாயத்தின்பேரில்செய்யப்பட்டது. ஆனால் பிரிட்டிஷ்காரர்கள் காலத்தில் அவ்விதமல்ல உத்தியோகத்தையும் வேறுவிதமான வருமானங்களையும் எண்ணி வெள்ளையர்கள் உடுப்புக்களை ஏற்றுக்கொண்டு திரிந்து வருகிறார்கள் இப்பொழுது தமிழர்கள் சிங்களவர்களின் ஆதிக்கத்திற்கு வந்துவிட்டார்கள்.

இலங்கைக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் சர்வகலாசாலையும் கண்டியில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல அது அமைக்கப்பெற்றிருக்கும் கட்டிடங்களின் அமைப்புக்கள் முதலியனவும் பழைய சிங்கள மன்னர்கள் காலத்து கட்டிட முறைக்கு ஒத்ததாகவிருக்கவேண்டுமென்ற அவாவினால் செய்யப்படுவருகிறது. அங்கே புத்த மதப் பிரசாரத்திற்கும், அதற்குத் தக்க படிப்பிற்கும் வேண்டிய ஏற்பாடுகளும் ஒரு சிங்களப் பிரபுவால் செய்யப்பட்டு வருகிறது. இலங்கை சர்வகலாசாலையில் ஒரு மாணவனுக்கு மாதம் 150-200 வரையில் செலவாகுமென்று சொல்லுகிறபடியால் அதில் பெரும்பாலான சிங்களவர்களது மக்களன்றித் தமிழர்களின் பிள்ளைகள் கல்வி பயில இடமிராது.

இலங்கையிலுள்ள தமிழர் ஏழை. பிரயாசையுடைய வியவசாயி; பிச்சை வாங்கும் ஏழையல்ல. 100க்கு 98 தமிழனை நடுத்தரதிற்கும் சிறிது தாழ்ந்த பாடசாலையின் தொகுதியிலும் சேர்க்கலாம் இந்நிலையில் உள்ளவர்கள் வருங் காலத்தில் ஏற்படவிருக்கும் கண்டி சர்வகலாசாலையில் தமிழர் மக்களை எப்படி கல்வி பயில முடியும்? சிங்களவர்களுடன் சேர்ந்து, அவர்களுக்குக் கையாளாக விருந்து பட்டம் பதவிகள் பெற்றுள்ள தமிழ் மக்கள்தான் கண்டி சர்வகலாசாலையில் கல்வி பயில முடியும் என்பதை இனி மறக்க வேண்டாம்.

தமிழன் என்ற உணர்ச்சியில்லாது சிங்களவர்களின் கையாளாக விருக்கும் தமிழன் பிள்ளைகள் கண்டி சர்வகலாசாலையில் படிப்பார்களேயானால் தமிழன் கதி என்னவாகும். போர்த்துகேசியர் காலத்திலும் அகற்குப் பிந்தும் பல காரணங்களை முன்னிட்டு "வில்சன்" "ஹாய் சிங்டன்" என்று தமிழன் பெயர் வைத்து அவர்கட்கு அடிமைகளாக காலங்கழித்தான். இனி கண்டி சர்வகலாசாலையிலிருந்து வரும் தமிழன் தலையில் சீப்பு அணிவான், இடுப்பில் சாரம் கட்டுவான், தமிழை மறப்பான், பெயரை பொலனம்பலம் என்றிருந்தால் அதை டொன்னுசிங்கோ என்று மாற்றிக் கொள்ளுவான், காகைகுத்திக் கொள்ள மாட்டான் வேறு என்ன வேண்டும்.

இந்நிலைமையைத் தான் சிங்கள சகோதரர்கள் வேண்டுகிறார்கள். அதையே சில தமிழ் சகோதரர்களும் விரும்புகிறார்கள். ஆனால் எல்லாத் தமிழனும் வரும்புகிறானா என்று கேட்க வருமபுகிறோம். விலகஷன் முடிந்தது, இனி என்ன என்று 5 வருஷம் தூங்கினால், 5 வருஷம் கழிந்து நாம் பார்க்கக் கூடியது யாழ்ப்பாணம் தெருக்களில் பொன்னுசிங்கோவையும், சாமி நாயக்காவையும் காணலாம். தமிழ்மக்கள் கண்விழித்தெழுந்து தங்கள் கல்வி, கலாசாரம், நாகரிகம் முதலியன அழியாதிருக்க வழி தேடவேண்டும். இதற்கு ஓர் சர்வகலாசாலையை வடமாகாணத்தில் ஏற்படுத்துவோம் என்று சொல்வது சரிதான். அதற்குமுன் செய்யப்படவேண்டிய காரியங்கள் பலவுள அக்காரியங்களைச் செய்யாது இந்த சர்வகலாசாலைத் திட்டத்தைப்போட்டால் ஆற்றங்கரையில் அஸ்திவாரம் இல்லாத மண் வீடு கட்டுவதற்கு ஒப்பாகும் என்று நாம் எச்சரிக்கை செய்யவேண்டியிருக்கிறது. தமிழன் இனனும் தன்னை உணரவில்லை. தான் யார், தன் மரபு என்ன என்பதையுணரவில்லை. அதுமாத்திரமல்ல இலங்கைத் தமிழனுக்கு வரக்கூடிய ஆபத்து என்ன என்பதை அவன் உண்மையாய் உணரவில்லை. கிராமத்திலுள்ளவன் அன்றன்றாடு பாடுபட்டு உண்டு உடுத்தக்காலங் கழித்தால் போதும் என்று எண்ணும் நிலையிலிருக்கிறான். இந்நிலை இனனும 2 வருஷ காலத்திற்குள் மாறவேண்டும். அப்பொழுதுதான் தமிழன் முன்னேற்றத்திற்கு எந்த திட்டத்தையும் போடக்கூடும். தமிழர்கள் இவ்விஷயங்களை ஊன்றிக் கவனிப்பார்களா?

கைமோசக் கொலை வழக்கில் இரு சகோதரர்கள்

எதிரிகளுக்குச் சிறைத் தண்டனை

களுத்துறை, நவ. 1

வெலிப்பென்ன என்னுமிராமத்தில் ஹொராஸ் என்பவரைக் கொலை புரிந்ததாக அதே கிராமத்தில் கொடகேதரா என்னுமிடத்தைச்சேர்ந்த எஸ். பீ. டீ., எஸ் உக்குசிங்கோ ஆகிய இரு சகோதரர்கள் மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு களுத்துறை கோர்ட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரிகள் கைமோசக் கொலைபுரிந்ததாக ஒப்புக் கொண்டதால் நீதிபதி முதல் எதிரியான பீட்டருக்கு 9 வருட சிறைத் தண்டனையும் இரண்டாவது எதிரியான எஸ் உக்குசிங்கோவுக்கு 6 வருட சிறைத் தண்டனையும் விதித்தார்.

ஜவுளியில் கொள்ளை லாபமடித்ததாக வழக்கு

எதிரிகள் பிணையில் விடுபட்டனர்

கொழும்பு, நவ. 2

செட்டியார் தெருவில் உள்ள ஒரு ஜவுளிக் கடையைச் சேர்ந்த டி. பளனியாண்டிப்பிள்ளை எஸ். பி. செல்லப்பன் ஆகிய இருவரும்கெஜம் ரூ 6-60 மதிப்புள்ள ஜவுளியை ரூ 7-50 ஆக ஹமீத எனபவருக்கு குறிக்கப்பட்ட அளவு கூப்பனகள் இல்லாது விற்றதாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கொழும்பு அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு. பண்டிதகுணவர்தனா முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரிகள் தாங்கள் குற்றவாளிகளல்லவென்று கூறியதன் மேல் நீதிபதி அவர்களை தலா ரூ 200 பிணையில் போகமாறு விடுத்து வழக்கு விசாரணையை இம்மாதம் 18-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

விவசாய இலாகா மாஜிடைரக்டருக்கு பாராட்டு

கண்டி, நவ. 1

விவசாயு இலாகாவின் மாஜி டைரக்டர் திரு எல். ஜே செனிவிரத்தினுவுக்கும் ஸ்ரீமதி செனிவிரத்தினுவுக்கும் பாராட்டுது தெரிவிக்கு முகமாக ஒரு தேக்கச்சேரி பேராதனையிலுள்ள விவசாய இலாகா அதிகாரிகளால் நடத்தப்பட்டது.

போலிஸ் அதிகாரியை தாக்கினர்

எதிரிக்கு சிறைத்தண்டனை

மாத்தறை, அக். 31

டொன்ட்ராவைச் சேர்ந்த கர்மதாஸா என்பவர் போலிஸ் இன்ஸ்பெக்டர் எச். டி. ஸி. குணசேகரா என்பவரைத் தாக்கியதாக குற்றஞ் சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கில் எதிரிக்கு மாத்தறை மாஜிஸ்டிரேட் திரு ஏ. எல். எஸ். சிரிமானா ஒரு மாதச் சிறைத் தண்டனை விதித்தார்.

இலங்கைக்கு கடற்படை

அரசாங்கத்தின் ஆலோசனை

கொழும்பு, நவ. 2

இலங்கையிலே சிரந்தரமான ஒரு கடற் படையை அமைப்பது பற்றி அரசாங்கத்தினர் ஆலோசித்துவருவதாகக் கூறப்படுகிறது. பழைய மந்திரி சபை இது பற்றி ஆலோசித்து குடியேற்ற நாட்டு மந்திரிக்குப் கடற்படை அதிகாரிக்கும் இது பற்றி தெரிவித்துள்ளனரென்றும் இலங்கையின் பாதுகாப்பை முன்னிட்டு இதனைச் செய்யஆலோசித்துள்ளனரென்றும் இக்கடற் படைக்கு ஏற்கெனவே பயிற்சி பெற்றுள்ள இலங்கையரை எடுத்துக் கொள்வதென்றும் ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.

அரச குமாரி திருமணம்

மகுடாதிபதிகள் பலர் சமூகமளிப்பர்

லண்டன், அக் 31

இளவரசி எலிஸபெத் திருமணத்தற்கு நாலு அரசர்களும், ஆறு அரசிகளும் சமூகமளிப்பார்கள் என்று தெரிகிறது. நவம்பர் 20ல் வெஸ்ட்மினிஸ்டர் தாக்கோவிலில் நடக்கும் இவ்வைபவத்திற்காக மாட்சிமை தங்கிய மன்னர் பிரானும் ராணியும் அனுப்பிய திருமண அழைப்பிதழ்களை கீழ்க் கண்ட பதன்மம் ஏற்றுக்கொண்டு பதிலளித்துள்ளனர்.

நார்வே மன்னர், ரூமேனிய மன்னர், டென்மார்க் மன்னரும் ராணியும், யூகோஸ்லேவியா மாஜி மன்னரும் ராணியும், எபானிய மாஜி அரசி, யூகோஸ்லேவிய ராணி, கிரீஸ் ராணா, ருமேனிய அரசி.

(ராய்ட்டர்)

அரசியல் அடிவானத்திலே!

"காண்டீபன்"

சிங்கக் கொடிதான் கொடி! சிங்கக் கொடியையே நிலைநாட்டி வட இந்தியாவிலிருந்து ஒரு ஆரிய மன்னர் ஒருவரைக் கொண்டுவந்து இலங்கா துவீபத்தை அரசாட்சிசெய்ய வைக்கவேண்டும் என்று ஒரு மேதாவி கொழும்பு நகர சபை மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் சங்நாதம் செய்தார். செய்ததும் சபையோர் வெறுப்பைக் காட்டினார்கள்! "இல்லை! இல்லை! நான் சொன்னது முதலாம் அரசன் விஜயனின் சந்ததியிலிருக்கும் ஒரு அரசிளங்குமாரனைத்தான் கொண்டு வந்து முடிசூட்ட வேண்டுமென்றதே" என்று அப்போது விபரித்தார்.

சரித்திரத்தின்படி விஜயனுக்கு முறைமையான மனைவி மூலம் சந்ததியில்லை. குவேனியின் மூலம் இரு பிள்ளைகள் உண்டு அவர்களுடைய சந்ததிகளைதான் இப்பொழுது விந்தனைப் பகுதியில் வசிக்கும் வேடுவர் ஆகவ இந்தப் பெரியார் இராஜா பிடிக்கப் போவது வட இந்தியாவிற்கு அல்ல; வந்தனைக்குத்தான். இதைத் தெளிவாகச் சொல்லியிருந்தால் சபையோர் ஆத்திரமும் மனஸ்தாபமும கொள்ளாமல் குதூகலம் கொண்டிருப்பாரே!

* * *

சென்ற அரசாங்க சபை காலத்தில் மந்திரிப்பதவியிலிருந்தவர்கள் அனைவரும் பொதுஜன மதிப்பை இழந்தே விட்டார்கள். ஒரு சிலர், கிராமவாசிகள் தங்கள் சொந்தக் காணி பூமியில் குடிமையாயிருப்பதாலும, பெருவாரி காரியச் சுரங்கங்கள் வைத்து நடத்துவதாலும கிடைத்த நாட்டாமையைக் கொண்டு தங்கள் தொகுதியில் சிததி பெற்றனர். ஆனால் இந்த நாட்டாமையில்லாத மந்திரிமார்கள் எத்தனை போ தந்திரோபாயங்கள், மந்திரங்களைக் கையாண்டனர், வட இலங்கையில் ஒத்துழைப்பு என்று ஒரு மந்திரதை ஒரு மந்திரி உச்சரித்ததார். மந்திரதின் பலன் என்று அத்திவாரக் கல்லுகள் இட்டார். முதல் பொழி மண்ணைக் "கட்" செய்தார். ஆனால் பலனியும் பலிக்கவில்லை. இதேமாதிரி தென்னிலங்கையில் ஒரு மந்திரியார் இலவசம் என்று ஒரு மந்திரத்தையுச்சரித்தார். இலவசக் கல்வி, இலவசப் புத்தகங்கள், இலவசச் சாப்பாடு என்று பல்லவியெடுத்தார். ஆனால் இலவச மந்திரமும் பலனில் சூன்யமாகவே போயிற்று. கேவலம்! மேல் வீடு ஏற எத்தனம் செய்தார். பிரேரணை செய்தவரும் அநுவதித்தவருமே அகனறுவிட்டனர். தற்போது சிங்கக் கொடி மந்திரத்தைக் கிளப்பிச் சாதித்துவேஷத்தையே தஞ்சம் என்று நீந்தி பதவியென்ற கரையேற முன்வந்திருக்கிறார். இலவசக கல்வி யென்ற பந்தம் பிடித்துச் சித்தி கிடைக்காவிட்டால் போகுது; கொடியொன்றை யெடுத்து பிடித்துப் பார்க்கிறார். இதுவும் பிழைத்தால் சாமரையையும் விசிறியையும் கையிலெடுப்பார் போலும்.

* * *

முன்னர் ஒருமுறை இலங்கை அரசாங்கச் சேவையில் இதனை சிங்களவர், இதனை தமிழர், இதனை கிறிஸ்தவர், இதனை புத்த சமயிகள் என்று கணக்கிட்டார் ஒரு மந்திரியார். ஆந்தக் கணக்கிலே பிழையென்று யாரோ சுட்டிக்காட்டினர். கணித சாஸ்திரத்தில் ஒருகாலம் விசேஷ சித்தி யெய்தினன நான், நானாகக் கணக்கிட்டால் பிழை போகாது. என்னுடைய குமாஸ்தாதான் எண்ணினார் ஆனபடியால்தான் பிழை வந்தது என்றார். இப்போது அதே பேர்வழி இலங்கையில் சிங்கக்கொடி பறந்து இரண்டாயிரதது மூன்றாம் ஐம்பதெட்டு வருஷங்கள் என்று மிக்க நுட்பமான கணக்கெடுத்திருக்கிறார். இதில் பிழையிருக்கிறதென்று யாராயினும் சொன்னால் யார்பேரில் அந்தப் பிழை சாட்டப்படுமோ தெரியவில்லை! இப்போது அவரிடம் குமாஸ்தா ஒருவரும் வேலையிலிலையே என்று வதந்தி.

* * *

சர்வதேச தொழிலாளர் சங்கததின் ஆசியாப பிரதேச மகாநாடு புது டில்லியில் நடைபெறுகின்றது. அதிலே தொழிலாளர்கள் பிரதிநிதிகளும் முதலாளி பிரதிநிதிகளும் பிரசன்னமாயிருப்பார்கள். இலங்கையிலிருந்து போகும் தொழிலாளர் பிரதிநிதியின் நாமம் முன்னர் ஒருகாலும் அதிகம் பிரபலப்படாததொன்று. அவர் அகில இலங்கைக்கு தொழிலாளர் காங்கிரஸ் என்ற ஸதாபனத்திற்குச் சேர்ந்தவராம். அதாவது திரு. குணசிங்கா ஆதிக்கம் செலுத்தும் ஸதாபனசதிலுள்ளவராம் இந்த ஸதாபனத்திற்குச் சேர்ந்த தொழிலாளர் மிகவும் குறைந்த தொகையினரே. இந்தப் புதுப் பெரியாருக்கு பிரதிநிதித்துவம் இல்லையென்று இலங்கை இந்தியத் தொழிலாளர் காங்கிரஸும், அகில இலங்கை தொழிலாளர் சம்மேளனமும நிராகரிக்கிறது இந்த இரண்டு ஸதாபனங்களும்தான் தொழிலாளர் ஸதாபனங்களுள் மிகப் பெரிதானவை.

இந்தப் பிரதிநிதியை தொழிலாளர்கள் தெரிவு செய்யவில்லையாம். இந்த விஷயத்தைப்பற்றி திரு. குணசிங்கா வலிய வந்து ஏதோ அதிகம் சொல்கிறார். என்ன சொல்கிறார் தெரியுமா? இந்தப் பிரதிநிதியைத தெரிவு செய்வதில் நான் எள்ளளவும் தொடர்பு வைக்கவில்லை. ஆனால் மந்திரியார்தான் சரியான பிரதிநிதி என்று தெரிவு செய்தார். மந்திரியார் ஜாயாவே தெரிவு செய்தார். நான் அவரை எது வகையிலும் இப்படி தெரிவு செய்ய வேண்டும் என்று கேட்கவில்லை, அவர் தானாகவே தெரிந்தார். இவ்வாறு மந்திரியார் ஜாயாவின் "சக்கிடுத்தார்" சொல்கிறார், தெரியப்பட்டது அந்தச் சக்கிடுத்தாரின் கையாள். நமப முடியாதா இந்தப் பாலன் குழந்தை குணசிங்கா சொல்லும் மழலைச் சொற்பொழிவை? என்ன சந்தேகப் பிராணிகள் இந்த ஊரில் இருக்கிறார்கள்?

ஃ ஃ ஃ

பிரதமர் திரு. சேனாநாயக்காவின்பால் பூரண நமபிக்கையைத் தெரிவிக்கவும் அவருக்கு ஆசீர்வாதங்கள் சொல்லவும் ஒரு பிரேரணை கொலன்னாவை நகரசபைக் கூட்டத்தில் அட்டவணையில் இருந்ததாம். விஷயம் எடுக்கப்பட்டதும் சிலர் கூட்டதைவிட்டு நடையைக்கட்டி விட்டார்களாம். நடவடிக்கைகள் செல்லுபடியாகிறதற்குத் தேவையான ஆகக் குறைந்த தொகையினர் இல்லாததனபேரில கூட்டமே கலைக்கப்பட்டது.

'யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே' பாராளுமன்றததில் திரு சேனாநாயக்காவிற்கு இருக்கும் ஆதரவும் இப்படி தேய்ந்து போமம.

அடே கொலன்னாவையிலே தானே ஊர்வலம வரும தொழிலாளிகளின் மேல் சேனநாயக்காவினுடைய சர்க்கார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததும் கந்தசாமி கொல்லபபட்டதும்

ஃ ஃ ஃ

ஒப்பந்தத் தலைப்புகளை ஏற்கனவே பிரசுரிக்க வேண்டுமென்று திடீரென சேனாநாயக்காவுக்கு முதுகு கொடுத்துப் பிரசாரம் செய்யும் தினசரி ஒரு தலையங்கம் எழுதியிருக்கிறது. இதில் ஏதோ விசேஷ சங்கதியிருக்கிறது ஒப்பந்தத் தலைப்புகள் என்பது இலங்கை அரசாங்கததிற்கும் பிரிட்டிஷ் அரசாங்கததுறகுமிடையே ஸீக்கிரத்தில் நிறைவேறவிருக்கும் ஒப்பந்தத்தைச் சார்ந்ததுதான். இந்த ஒப்பந்தம் இலங்கையை பிரிட்டிஷ்துருப்புக்கள் அடித்தளமாக வைததிருந்து இந்து சமுத்திரத்தில் தங்கள் ஆதிக்கததை நிலைநாட்டும் நோக்கமுடையது. இதுவிஷயத்தில் இலங்கையைச் "சீனன இங்கிலாந்து" என்று பேர் கட்டிய ஸர் ஒலிவர் குணதிலக்காவும சேனநாயககாவுமே இதுவரையும் இலங்கையின் பேரில் பேச்சு நடததியவர்கள். இரகசியமாகவே எல்லாம் நடந்தது. பொது ஜனம் விபரதததை வெளிப்படுத்துங்கள் என்று கூக்குரலிட்டும் ஒன்றும் நடைபெறவில்லை. சேனாநாயக்காவிற்கு சாதகமாய் உழைக்கும் பகதரிகை, இதுவரை காலமும் இந்த விஷயததைப்பற்றிக் கண்டனம் செய்யாத பத்திரிகை, விபரததைப் பிரசுரம் செய்யுமாறு பொதுஜனக் கோரிக்கையைப்பற்றி மௌனம் சாதித்த பத்திரிகை திடீரென்று இவ்வாறு இப்பொழுது எழுதியிருக்கிறதில் ஏதோ மாமம கட்டாயம் இருக்கவேண்டும். ஓர் ஹேஷ்யம் நேரடியாகச் சொல்லலாம். சேனாநாயககா மந்திரி சபையிறகுள்ளேயே அபிப்பிராய பேதம் இருக்கிறது என்பதுதான்.

* * *

அரசியல் உத்தியோகஸதர் தொழில் சங்க உரிமையென்ற விஷயத்தைப்பற்றி ஏறக்குறைய ஒவ்வொரு நாளும் பத்திரிகையொன்று தலையங்கம் எழுதுகிறது. அரசாங்க உத்தியோகஸதருக்கு ஏதோ விசேஷ சலுகைகள கொடுப்பதாகவும் அவர்கள் அதைப் பொறுப்புணர்ச்சியோடும், சாவதானமாகவும், அமைதியாகவும் கையாள வேண்டுமென்று உபதேசம் செய்துகொண்டு வந்தது அப்பத்திரிகை. பொறுப்புணர்ச்சியும், அமைதியும், நிதானமும் அரசாங்க தொழிலாளர்களிடம் தான் இல்லை, அரசாங்க அதிகாரிகளிடம் நிறைந்திருக்கின்றதென்ற கருத்து உள்ளூராக அந்த தலையங்கங்களில் தொனிததுத காட்டியது. சென்ற மாதம் 25-ம் தேதி சனிக்கிழமை இங்கிலாந்திலிருந்து வரவழைகப்பட்ட அரசாங்க தொழிலாளர் பிரச்னைகளில் அதிகம் அனுபவம் வாய்ந்த நிபுணர் திரு ஏ. ஜே. ரி. டே என்றவர் இலங்கையில் அரசாங்க தொழிலாளர்கட்கும் அதிகாரிகட்கும் இருக்கும் பிரச்னையைப்பற்றி விசாரணை செய்து எழுதிய ரிப்போர்ட்டு பிரசுரிக்கப்பட்டது அது பிரிசுரிக்கப்பட்டதும் இந்தப் போதனைகள் செய்த பததிரிகை வாயை மூடிவிட்டது நியாயம் என்ன தெரியுமா? இலங்கையில் அரசாங்கத் தொழிலாளர்கட்கு அதிகாரிகள் செய்துவந்த கொடுமையை வெட்டவெளியாக்கி தொழிலாளர்கட்கும அதிகாரிகட்கும இடையேயிருக்கும் பிணக்குக்கு அதிகாரிகளே காரணமென்று கூறியிருக்கும் தீர்ப்புத்தான்.

* * *

அரசாங்கத் தொழிலாளர்கட்கு கொடுக்கப்படும் புதிய அந்தஸது அநேக வகைகளில குறைவுடையது. அதில் பொருந்தியிருகக்கிற கட்டுப்பாடுகள் கிரியாம்சத்தில் பல சிக்கல்களை கொண்டுவரக்கூடியது. ஆனால் தற்போது பிரதமர் அறிக்கையிடிருப்பது கொடுக்கப்படுவதும் ஏற்கப்படுவதுமான ஒரு கொடையல்ல. கொடுப்பதும் ஏற்பதும் என்ற அம்சம் அதில் இல்லை. ஒரு புதிய அந்தஸது வகுக்கப்பட்டிருக்கிறது. அந்த அந்தஸது வேண்டப்பட்டதில் குறைவானதே ஆனால் அதில் இருந்து தங்களுடைய போராட்டத்தை மேலும் நடத்துவது சுலபம். அரசாங்க தொழிலாளர் அதிகாரிகளுடன் செய்யும் போரில் ஒருபடி முன்னேறியிருக்கின்றனர். அவ்வாறு கிடைக்கத்தான் மேற்றத்தைப் பயன் படுததி தங்கள் ஸ்தாபனங்களைப் பலம் கொண்டனவாக்கி மேலும் போராடுவதையே கைக்கொள்ள வேண்டும். அதை விடுத்து அரசினர் கொடுக்கும் கொடையை நிராகரிப்போம் என்று ஒரு சிலர் சொல்லும் பேச்சு பதர் வார்த்தை. கொடுப்பதும் ஏற்பதும் என்ற அம்சம் இல்லாத போது நிராகரிபபோம என்பது அர்த்தமற்ற பேச்சே.

தற்போது அரசாங்க தொழிலாளர் ஸ்தாபனங்கள் செவ்வனே அமைக்கப்பெறுதும், முறையேஅணிவகுக்க படாமலும் இருக்கின்றது. தங்கள் ஸ்தாபனங்களைச்சீர்படுத்துவதுதான் இப்போது அவர்கள்மேல் பொறுத்திருக்கும்முதல்கடமை சென்ற தொழில் நிறுக்கத்தின்போது பிரதானமான லிகிதர்சங்கஸதாபனத்திலேயே சீரான ஒழுங்குத் திட்டமில்லாதது எல்லோருக்கும் தெரியும். எல்லோரும் சந்தித்து கலந்தாலோசிக்க ஒரு சொந்தக் காரியாலயம் இல்லாமல் தத்தளித்ததை யார் மறக்க முடியும். நூற்றுக் கணக்கானோர் தொழில் நிறுத்தத்தில் பங்கெடுக்காது விட்டது ஸ்தாபனத்தின்பேரில் அபிமானமும் நம்பிக்கையுமிலலாமல் தானே. குறித்த சேவையிலிருப்போர் அனைவரையும் அங்கத்தவர்களாக்கி அவர்கள் சங்கத்தின் ஒருமித்துச் செய்த தீர்மானங்களைப் பக்தியோடுகடைப்பிடிக்கும் நிலைமையைச் சீக்கிரம் நிலைநாட்ட வேண்டும். இதைக் கவனிப்பதே கடமை.

2000 பெட்ரோல் கூப்பன்கள் களவு

தாயும் மகனும் பிணையில் விடுபட்டனர்

கொழும்பு, நவ. 2

ஹெந்தல என்னுமிடத்திலுள்ள திரு. கே. பி. எல். பெரேரா என்பவருடைய காரியாலயத்திலிருந்து 2000 பெட்ரோல் கூப்பன்களை (வெட்டப்படடவை) களவாடியதாக அங்குள்ள காவற்காரரான ஏ. ஸி ஹமீர் என்பவர் மீதும் அவருடைய தாயார் ஸ்ரீமதி அனுஹமீர் மீதும் குற்றம் சாட்டிக கொண்டுவரப்பட்ட வழக்கு கொழும்பு மாஜிஸ்டிரேட் திரு. பண்டிக குனவர்த்தனா முன் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரிகள் தலா ரூ. 500 பிணையில் போகுமாறு விடுத்து விசாரணையை மாஜிஸ்டிரேட் 14-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

காட்டு யானைகள் ஏற்றுமதிக்குத் தடை

விவசாய இலாகாவின் உடன் நடவடிக்கை

கொழும்பு, நவ. 2

இலங்கையிலிருந்து சமீப காலத்தில் அயல் நாடுகளுக்கு அதிகமாக காட்டு யானைகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. இப்பொழுது இக்காட்டு யானைகள் ஏற்றுமதி செய்வது தடை செய்யப்பட்டுள்ளதாக விவசாய இலாகா அறிக்கையொன்று கூறுகின்றது. சமீப மாதங்களில் இங்கிருந்து ஏராளமான யானைகள் வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்டு வரப்பட்டதால் இலங்கையில் இன்னும் சிறிது காலத்துள் யானைகளே இல்லாது போய்விடுமோ என்று பயப்பட வேண்டியிருப்பதாகவும் யானைகள் ஏற்றுமதி விவசாய இலாகாவின் கொள்கைக்கு மாறானதென்றும் வியாபாரப் போக்குக்கு இடமளிக்கும் ஆபத்தைத் தவிர்ப்பதற்காக சர்க்கார் இந்த ஏற்றுமதியைத் தடை செய்வதாகவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும் இங்கிருந்து முதலைத் தோல் ஏற்றுமதி செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இத்தோல் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள கம்பெனிகளுக்கு இனிமேல் முதலைத் தோல் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது தடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அர்பன் சபை அங்கத்தவருக்கு ரூ. 40 அபராதம்

அனுராதபுரம், அக். 31

அனுராதபுரம் அர்பன் சபை அங்கததவரான திரு. ' பிள்ளை. டொன் எஸானிஸ் அப்புஹாமி என்பவர் குடி வெறியில் பொது வீதியில் பொது மக்களுக்கு அதிருப்தி தரக்கூடிய முறையில் நடந்துகொண்டதாகவும், பேசத் தகாத வார்த்தைகளைப் பேசியதாகவும் போலிஸ் கான்ஸ்டபிள் முகம்மது என்பவரைத் தாக்கியதாகவும் குற்றம் சாட்டிக் கொண்டு வரப்பட்ட வழக்கில் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் நீதிபதி அவருக்கு ரூ. 40 அபராதம் விதித்தார்.

யுத்தங்களில் உயிரிழந்தோர் ஞாபகார்த்த தினம்

நவம்பர் 9-ம் தேதி அனுஷ்டிக்கப்படும்

கொழும்பு, நவ 2

இரு பெரிய உலக யுத்தங்களிலும் உயிரிழந்தவர்கள் ஞாபகார்ததமாக ஆம்மாதம் 9-ம தேதி ஞாயிற்றுக்கிழமையை அனுஷ்டிகக வேண்டுமென்றும இதனதில் காலை 11 மணிக்கு சுமார் இரண்டு நிமிடநேரமௌனப் பிரார்ததனை செய்ய வேண்டுமென்றும் குடியேற்ற நாட்டுமந்திரியிடமிருந்து கவர்னருக்கு செய்தி கிடைத்துள்ளது. இத்தினத்தை இருயுத தங்களிலும் உயிரிழந்தவர்கள் ஞாபகார்த்த தினமாக அனுஷ்டிக்குப்படி இலங்கை மக்களைக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இன்று முதல் மேல் பகுதி ரயில சர்வீஸ்

கொழும்பு, நவ 2

மேல் பகுதிக்கும கொழும்புக்கும் இடையில் பழைய ரயில் சர்வீஸ் இன்று முதல் நடைபெறும் என்று தெரிகிறது. ஆகஸட் வெள்ளப் பெருகின் பின் இன்றதான் முதன்முறையாக கொழும்புக்கும பதுளைக்கும் இடையில் ரயில்கள் ஓடும் இன்று இரவு முதல் எல்லா இடங்களிலும் உள்ள ரயில போக்கு வரத்துகள் பழையபடி திரும்பும். ஆனால் பேராதனை சந்தியிலும் மாத்தளையிலும் உள்ள சேதங்கள் திருத்திமுடிய இன்னும் ஒரு மாதத்திற்குமேல் பிடிக்குமென்றுகூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருக்கு கடிதம்

சிற்றம்பலத்தாரே முற்றும் பிழைத்தீரே!

ஐயா!

சிற்றம்பலத்துரையவர்களே! 18-9-47ல் வெளிவந்த தினகரனில் உள்ள உங்கள் கட்டுரையில் ஜீ. ஜீ. ஏமாற்றிப்போட்டார் என்று முறையிடுகிறீர். அதுமாத்திரமல்ல; ஜீ. ஜீ. எவரையும் விவாதிப்பதற்கு மேடையில் அழைப்பது வழக்கம். அதுபோல் அவரை நீரும் அறைகூவி அழைப்பதாகஎழுதுகிறீர். அவரை ஏன் அழைக்கிறீர்? அவர் உம்மிடம் எதற்கு வந்தார்? திரும்பவும் காங்கிரஸில் சேரும்படி கேட்கிறீரா? அல்லது உமக்காக வேலைசெய்த கூலியைக் கேட்கிறீரா? அல்லது கிடைத்த மந்திரி பதவி தன்னால் தான் வந்ததென்று தனகேதலையைக் குனிய வைத்து முடியைப்போடும்படி கேட்கிறீரா? அறைகூவி அழைத்து என்னத்தைத்தான் அவரோடு பேசப்போகிறீர். உமது வண்டவாளங்களையெல்லாம்புரினப்பேப்பரிலும் அவுட் பண்ணிவிட்டீரே.

அவ்வறைகூவலில் உமக்கு வாக்களித்த ஐயாயிரத்துச் சொச்ச வாக்காளரையும்தான் நீர் அறைகூவி அழைக்கிறீர். ஆதலால் உமக்கு மன்னார் வாக்காளனாகிய நானே சவால் விடுகிறேன்.

ஜீ ஜீ. உமக்கு ஏப்ரல் தொடக்கம் ஒவ்வோர் மாதமும் ஏமாற்றிவிட்டதாக முறைப்படுகிறீர். இவ்வளவு மாதங்களாக, இவ்வளவு வாரங்களாக, இவ்வளவு நாட்களாக ஏமாற்றிய ஜீ. ஜீ யை எப்படி ஐயா நம்பி ஆகஸ்டு முடிவில் அதாவது செப்டம்பர் 4-ம் தேதியெல்லாம் அங்குபோய் அவருக்காக வேலை செய்தீர். இது உமது மதிகெட்ட நிலைமையா? மதிகெட்ட நியாயமா?

உமது வெற்றியின் பெரும்பகுதி ஜீ. ஜீ. யின் 4-9-47 வெற்றியைநம்பியிருந்ததும்அதுமட்டும் உம்மால் மன்னாரில் எலெக்ஷன்வேலைசெய்யத்தெரியாமல் இடைக்கிடை ஊருக்கூர் காரைக் கொண்டுபோய் விடுவதும் அங்குமிங்கும் தத்தக்க தகிடுதோமென்று கதைத்து வருவதும் எல்லோருக்கும் நன்றாக விளங்கியகாரியமே.

கடைசி நேரந்தான் 10, 11, 12 அதிலும் 13-ம் தேதிதான் பிரதானமான நேரமும் நாளுமாகும் அவ்வேளைதான் எல்லோர் மனமும் மாறிக்கொண்டிருக்கும் நேரம் அதோடு திருநியாகராசாவுக்காக யாழ்ப்பாணமிருந்து செல்வாக்கு மிகுந்தவண குமார் வந்து வேலை செய்த உமது பயங்கரமான நேரம். அந்த நேரம் ஜீ. ஜீ. வந்திராவிட்டால் உமது மனச்சாட்சியைத் தட்டிக்கேளும் என்ன சொல்லுமென்று. இவ்வேளையில் கதைகளில் வரும் சிறு குள்ளனாராகிய முயல் கடவுளே, கடவுளே என்று ஓடி உயிர் தப்பிய பின் காலைத் தூக்கிக் கொஞ்சியதோடு உனது கெட்டித்தனத்தாலல்லவா எனது உயிர் என்னிடமிருக்கிறதென்று உளறினாராம் மாதிரி அல்லவா இருக்கிறது உமது மந்திரி நியாயமும் எலெக்ஷன் வேலை தெரியாத உமக்கு 3 மாதங்கள் தேவைப்பட்டால் இதில் கைதேர்ந்த ஜீ ஜீ க்கு 3 நாட்கள் தாராளமாய்ப் போதும்.

படைகளை அணிவகுத்து விட்டுச் சேனாதிபதி ஒவ்வோரிடமும் போய் உற்சாகம் ஊட்டியது போலல்லவா இருந்தது 13உ யன்று ஜீ.ஜீ. தனது சுகவீனததையும், கம்மிய குரலையும் பறுவாய்பண்ணாது ஒவ்வோர் போலிங் ஸ்டேஷனிலும் ஓடி ஓடித் திரிந்தது அவரது காரைக் கண்டதும் ஓடிப்போய்க் குவியும் ஜனக் கூட்டத்திற்கும், அவர் அவர்களைக் கவரும் வசீகர முறையில் காட்டும் அன்பு வணக்கமுமல்லவா ஜனங்களின் மனதைக் கவர்ந் நின்றதன்றி உமது முகக் கவர்ச்சியா, உமது வார்த்தைக் கவர்ச்சியா அப்படியெல்லாம் செய்ததென்று நினைக்கிறீர்.

நீர் பல மாதங்களுக்கு முன் 9-5-87ல் யூ. என். பி.யை ஆதரித்த முறையில் விட்ட கடிதமும் தேர்தல் நெருங்க நெருங்க வெற்றியைக் கொடுக்காதென்று உணர்ந்ததால் அல்லவா திரும்பவும் ஜி. ஜீ யை அடி ஒடித் திரிந்ததும் வாக்காளர்களுக்கெல்லாம் (. ஜி) அவரவருவார், வருவாரென்று கூறித் திரிந்ததும் 2-9-47ல் ஜீ. ஜீ.யின் சார்பாக நான் யு. என். பி யைச் சேர்ந்தவனல்ல வென்று வெளியிட்டால் நிறம் மாறும் பச்சோந்தியென்று 9-9-47ல் வெளிவந்த துண்டுப் பிரசுரதால் சுடடிக்காட்டப்பட்டதையும் மறந்து விட்டீரா?

உமக்குப் பதவிகறிவிருந்தால் கொஞ்சம் யோசித்துப் பாரும் ஐயா! திரு. சிபாகராசா உண்மையான மனிதன் புரளிகளில்லாத மனிதன்; எவரோடும் அன்பாய்ப் பழகி வந்தவர் செய்யக்கூடிய உதவியை ஓரளவு மன்னாருக்குச் செய்தவர் ஆனால் அவர் காங்கிரஸை விட்டுமாறினார். யூ. என். பி என்று கூறினார் இதனால் ஜீ ஜீ யின் ஆதரவை இழந்ததினாலும், ஜீ ஜீ வெற்றி பெற்றதினாலுமல்லவா (5291 வோட்டுகளும் அதுவும்) உமக்கு வெற்றியைக் கொடுத்த இரண்டாயிரத்துச் சொச்ச வோட்டுகளும் யூ என். பி.யை எதிர்த்து விழுந்தவைகள். அவ்வளவு வாக்குச் சீட்டுகளை உமக்கு யூ. என. பி. யில் சேர உரிமை அளிக்காதவை என்பதை இதன்மூலம் விளங்குவதை விட்டுவிட்டு அன்று ஆசிரியர் சங்கத்தில் எல்லா வாக்காளரும் சேர்ந்து சொன்னால் ராஜினாமாச் செய்கிறேனென்பது உமது பச்சோந்தி நியாயமல்லவா? வாக்காளரின் தேர்தல் போட்டிச் சூடு ஆறாக இவ்வேளையில் சேர்ந்தும் சொல்லுவார்களா? யூ என் பி தியாகராசாவை ஆதரித்தவர்கள் மன்னாரை விட்டு வெளியேறிவிடடார்களா?

இதை நீர் உண்மையாக பரீட்சிக்கவேண்டுமானால், நீர் நேர்மையுள்ளவரும், சித்தாலமுள்ளவருமாயிருந்தால் உடனே ராஜினாமாச் செய்துவிட்டு அடுத்த தேர்தலுக்கு நின்று பாரும் உமது முடிவை.

உம்மை முதனமுதல் ஜீ ஜீ பேட்டி கண்டு காங்கிரஸில் சேரக் கேட்டபோது அவரதும் அச்சட்ட திட்டங்களும் உமக்குப் பிடிக்காததினால்தானே மறுத்துவிட்டீர்! சங்கதியில் சேர மறுத்த நீர் ஜீ ஜீ யின் தொடர்பை ஏன் வைத்துக் கொண்டு காரியங்கள் சாதிக்க வேண்டிய கடைசி நேரத்திலும் உமது ஆத்திரமான வேலை நடைபெற வேண்டிய 4 9 47 லும் ஜீ. ஜீ. யின் வாலைப் பிடித்துக்கொண்டு யாழ்ப்பாணத்திற்கு ஓடித் திரிந்தது ஏனையா? அவருடைய உதவியில்லாமல் வெற்றி பெற முடியாதென்பதை உணர்ந்ததினால்லவா என்பது பொதுஜன நியாயமுடிவாகும். அப்படிப்பட்ட நீர் கடைசிக் கட்டுரையில் நியாயம் முடிக்கிறீர்; யாழ்ப்பாணத்தில் ஜீ ஜீ. யின் அபேட்சையை ஆதரித்ததையிட்டு நான் மிகவும் விசனிக்கிறேனென்றும் அடிக்கொரு நினைவுள்ள காங்கிரஸென்றும் அர்பன் கவுன்சில் தலைவராயுள்ள உமது சகோதரருடைய செல் வாக்கைவிட உமது செல்வாக்கு யாழ்ப்பாணத்தில் எந்த நீபாயத்தைக் கொண்டுதானையா கூடிவிடும். உமது தேவைக்காக ஜீ ஜீ யிடம் ஓடித்திரிந்த ஏமாற்றென்பது பொது ஜனங்கட்கு நன்கு விளங்கும்.

உமது நியாயங்களைக் கொண்டு பார்க்கும்போது நீர் காங்கிரசில் சேராமல் ஜீ. ஜீ. யோடு தொடர்பு கொண்டிருந்தது வெற்றிக்காக இன்னோர் பகுதியாரை ஏமாற்றும் நோக்கமாகச் செய்ததென்றும் வெற்றி பெற்ற பின் நம்பியவரை நீர் ஏமாற்றியதன்றி ஜீ. ஜீ. உம்மை ஏமாற்றியதல்லவென்பதும் பொதுஜன நியாயமாகும்.

பத்திரிகையில் மன்னார் வாக்காளர்தான் உமது பச்சோந்திப் பட்டதைக் கண்டித்ததன்றி ஜீ ஜீ. ஓரறிக்கையும் விட்டதில்லை. உமது அறைகூவலோ "பனைமரத்தில் தேள் கொட்டதென்னை மரத்தில் நெறிகட்டியது போலிருப்பதால்" அவ்வறை கூவலை மன்னார் வாக்காளர் தங்களுக்கு விட்டதாகவே கருதிக்கொண்டிருக்கிறார்கள்

உமது மந்திரி பதவி நன்மையானதாயிருக்கலாம்; சேனாநாயக்காவோடு சேர்ந்ததும் நன்மையானதாகவே இருக்கலாம் அடிக்கொரு நினைவுள்ள காங்கிரஸின் உறவை அடிக்கொரு நினைவில்லாத சித்த பலமுடையதாங்கள் அறுத்து விட்டதும் நன்மையாயிருக்கலாம். ஆனால் நீர் மன்னார் வாக்காளருக்குக் காட்டித் திரிந்த வேஷமென்ன? போராட்டங் கடுமையாயிருந்த போது உமக்குப் பக்கபலமாய் நின்ற கோஷங் கிளப்பா விட்டாலும் கொடியை உயர்த்தா விட்டாலும் வேலை செய்தவர்கள் யார்? வெற்றி அறிவிக்கப்பட்டபோது உமது வலமிடமாக மேடையில் வைத்து மன்னார் வாக்காளருக்குக் காட்சி கொடுக்க வைத்த ஆசாமிகள் யார்? அவ்வேளை நீர் சேனாநாயக்கா பார்டியை எதிர்த்து மன்னார் வாக்காளர் மனங்குளிர பேசியதன் அர்த்தமென்ன என்பதெல்லாம் மன்னார் மக்களுக்கு நன்றாக விளங்கும் சந்திரனைக் கையால் மறைக்கவும் உலகை உலைமூடியால் மூடவும் புறப்பட்ட வீரவாகு என்பதும் மன்னார் மக்களுக்கு விளங்கும். மன்னாரார் நன்றியோடும், சாகியப் பற்றுதலோடும் நடந்து கொண்டார்கள். வேஷம் போட்டவர் நீர். வாக்கு மாறியவர் நீர். சாதி விற்றவர் நீர் நம்பிக்கை துரோகம் செய்தவர் நீர். ஆனால் ஆஷாடபூதி வேஷம் புனைந்த உமக்கு திருநியாகராசாவுக்குப் படிப்பித்ததுபோல் படிப்பிக்க மன்னார் மக்கள் தருணம் வரும்போது தவறமாட்டார்கள்.

ஐயா மன்னார் ஆசனத்தின் நாஅதிர்ஷ்டமோ ஏதோமுதன் முதற் போட்டியிட்ட ஜீ ஜீயை இழந்ததினாலோ அடுத்தடுத்து எந்தப் பிரதிநிதியையும் நிறைபார்த்ததில்லை. உங்கள் கட்டுரையிலும் அம்பாந்தோட்டைச் சிங்களவர் என்னில் பரிபூரண நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறீர். உமது அடுத்த தேர்தல் இலக்கு அதுவென்பதும் ஓர் குறிப்பாகலாம் வெளவால் தமிழருக்கு வாயாலே வாயாலே.....ஆனால் உமது வீராப்பைப் பார்த்தால் தொப்பிகளைக் கொண்டு வழிப்பிரயாணம் செய்த வியாபாரி தூங்கியதால் தொப்பிகளைக் குரங்குகள் தூக்கிக்கொண்டு கொப்புகளில் ஏறிக்கொண்டதாம என்பது தெரியும்தானே; கேட்டான் கிடைக்கவில்லை கெஞ்சினான் கிடைக்கவில்லை. ஆனால் கடைசியில் நடந்ததென்ன தன் தலைத்தொப்பியைத் தூக்கி யடிக்க எல்லாம் காலடியில் வீழ்ந்தது போலத்தான் இக்கதையும் தோன்றுகின்றது.

இங்ஙனம்,
மன்னார் வாக்காளன்
எம். தம்பிப்பிள்ளை
மன்னார். 29-10-47

500 தொழிலாளர் வேலை நிறுத்தம்

அப்புத்தளை, அக். 30

லிக்காப்பத்தை தோட்டத்திலும், கொல்லாந்தை தோட்டத்திலும் 25 தொழிலாளர்களுக்கு நோட்டீஸ கொடுத்திருப்பதன் காரணமாக, லிக்காப்பத்தையில் உள்ள 180 தொழிலாளர்களும் கொஸ்லாந்தைத் தோட்டத்திலுள்ள 325 தொழிலாளர்களும் 22-ம் தேதியிலிருந்து வேலை நிறுத்தஞ் செய்திருக்கின்றனர்.

25 பேருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் நோட்டீஸை வாபஸ வாங்கும் வரை வேலை நிறுத்தத்தை தொடர்ந்து நடத்துவதென மற்றவர்கள் தீர்மானித்திருக்கின்றனராம் அதோடு வேலை நிறுத்தஞ் செய்வோர் வேலைக்குத் திரும்பும்போது அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கக் கூடாது என்று ஒரு கோரிக்கையும் விடுத்துள்ளார்களாம். தங்களுடைய கோரிக்கைகளுக்கு தோட்ட முதலாளிகள் செவி சாய்க்குமாறு ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் பொதுக் கூட்டங்கள் மூலம் செய்கின்றனராம். திருவாளர்கள் ஏ பச்சமுத்துவும், எஸ். செல்லையாவும், தொழிலாளர்களின் கோரிக்கைகளைப் பெற்று சமரசஞ் செய்ய லேபர் கமிஷனரோடும், தோட்ட முதலாளிகளோடும் பேச்சு வார்த்தைகள்நடத்துவதாகதெரிகின்றது

ளர் தங்களுக்கு விட்டதாகவே கருதிக்கொண்டிருக்கிறார்கள்

சாதியபிமானம் சச்சரவை உண்டாக்குவதா?

குட்டி ஹிட்லர்களின் மட்டப் புத்தி

நிதானமற்ற சிங்கள வகுப்புவாதிகள் சிங்கக் கொடியை தேசீயக் கொடியாக்க செய்யும் முயற்சி

புதிய சிங்கள பத்திரிகையின் புத்திமதி

சென்ற விபாழக்கிழமை மாலை வெளிவந்த "லங்கா தீப" என்னும் சிங்களப் பத்திரிகையில் "ராஜமாரி" எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்:

சுமார் இரண்டாயிரம் வருடங்களாக சிங்கக் கொடியானது இலங்கையின் தேசியக் கொடியாக இருந்து வந்திருக்கிறதென்பதற்கு அபிப்பிராய பேதமே இருக்க முடியாது. அப்படியானால் இது சம்பந்தமாக தற்போது அபிப்பிராய பேதமும் துவேஷமும் ஏற்பட வேண்டிய காரணமென்ன? இதை உண்டாக்கியவர் யாவர்?

தேச மக்களிடையே இல்லாதிருந்த இந்தக் கொடி சம்பந்தமான அபிப்பிராய பேதத்தை உண்டாக்கியவர்கள், ஜனத் தலைவர்கள் என்று சொல்லப்படும் பணம் படைத்த பலவான்களே இவர்கள் சென்ற பொதுத் தேர்தலின் போது இக் கொடியை தேர்தல் ஆயுதமாகக் கையாண்டது, இடது சாரிகளைத் தோற்கடிப்பதற்கேயன்றி, இவர்களுக்குள்ள தேசீய-சாதியபிமானத்தாலல்ல வென்பதைக்குறித்துக்கொள்ள வேண்டும். "இடது சாரிகள் ரஷியக் கொடியை ஏற்றுவதற்கு முயற்சி செய்கிறார்கள். எனவே நாம் நமது சிங்களக் கொடியை உயர்த்த வேண்டும்" என்ற சுலோகததை இல்லாத-பொல்லாத மாதிரி வர்ணித்து, சிங்களக் கொடியை காட்டிக் காட்டி பொதுக் கூட்டங்களில் ஆக்ரோஷத்துடன் மார்பு தட்டி கர்ஜனை செய்தார்கள். இதனால் இடது சாரிகளின் பலம் ஹீனமடையவில்லை ஆனால், நிதானமற்ற சிங்கள மக்கள் கோபமும் வெகுளியும் கொண்டு, இலங்கையர்களான மற்ற வகுப்பினர்களின் மீது பொறாமைகொள்ளத்தொடங்கி விட்டார்கள். இதனால்தான் இந் நாட்டில் இல்லாத பேதமும் பகைமையும் உண்டானது. இந்த அவசியமற்ற-அர்த்தமற்ற வாய் வீச்சுக்களை கேட்டிருக்காதவர்கள் தற்போதுள்ள சிக்கலைப்பற்றி லட்சியம் பண்ணவில்லை.

ஃ ஃ ஃ

ரஷியக் கொடியை தேசத்தின் தேசீயக் கொடியாக்க வேண்டுமென்று, இடது சாரிகள் கூறியதாகவோ அல்லது அதற்காக அற்பமேனும் முயற்சியெடுத்ததாகவோ அறிந்து கொள்ள முடியவில்லை. இடது சாரிகளின் பிரசாரங்களில், இலங்கைப் பாட்டாளி மக்களுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், தங்குவதற்கு நிழலும் வேண்டித் தருவதே என்று கூறப்பட்டதே யொழிய கொடியைத் தெரிவு செய்யும் பிரச்னையைக் கிளப்பவில்லை. கொடிக்குமுன்பாக மக்களின் வாழ்க்கைத்தேவைக்கே அவர்களின் முயற்சி யாவும் கலகத்தையுண்டாக்கி விட வேண்டுமென்று எண்ணிய நரி ஒரு கல்லைக் கொண்டுவந்து "இந்தக் கல் என்னுடையது" என்று மற்றொரு நரிக்கு ஆங்காரமாய்ப் பேசியதும், 'உன்னுடையதா இந்தக் கல், உன்னுடையதானால் எடு பார்க்க' என்று மற்ற நரி ஆண்மை பேசியது. கலகம் மூண்டது, நரிகள் ஊளையிட்டன. எமது தலைவர்களுக்கும் இடது சாரிகளோடு மேற் கூறியவாறு கலகத்தை மூட்டிவிடத்தான் அவசியமாய் இருந்தது. எனினும் இடது சாரிகள் இதற்கெல்லாம் அகப்படவில்லை. இப்பொழுது குப்பையைக் கிளறியவர்களே அதன் கெட்ட நாற்றத்தையும் மோந்துகொள்ள விட்டுவிட்டு, மற்றவர்கள் சாதுரியமாக பின்வாங்க வேண்டும்.

பொது மக்களுக்கு கோபமூட்டுதல்

கொடி சம்பந்தமாக சமீபத்தில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் பொது மக்களுக்கு ஆவேஷத்தையுண்டுபண்ணக் கூடிய முறையில் காரசாரமாகப் பேசப்பட்டிருக்கிறது. நிதானமற்றவர்கள் சூழ் நிலையை அறியாத முட்டாள்கள் கைதட்டிக் கரகோஷம் செய்திருக்கக்கூடும். எனினும் கடைசியில் நிகழ்வது அனர்த்தமே.

ஃ ஃ ஃ

சாதியாபிமானம் ஒப்பற்ற குணதர்மமாகும் அது போன்றுதான் சமயாபிமானமும் மக்களின் கண்ணியம் பொருந்திய வாழ்க்கைக்கு சிரேஷ்டமானதாகும் எனினும் மக்களிடையே சச்சரவையும் மனஸ்தாபத்தையும் உண்டாக்கி விடுவது சாதியாபிமானமா? இல்லை நிதானமற்ற சாதிப் பைத்தியமாகும் முற் காலத்திலே சமயாபிமானத்தை தவறுதலாகக் கருதிபபிரமைகொண்டசிலசமூகங்கள் ஒன்றோடொன்று யுத்தம் செய்து லட்சக்கணக்கான மக்களைக் கொன்று குவித்திருக்கிறார்கள். அது போன்று இப்பொழுது சாதியாபிமானத்தை தவறுதலாகப் புரிந்து சாதிப் பைத்தியத்தினால் சிலர் மிகவும் நாசகரமானவற்றைச் செய்கிறார்கள். ஹிட்லருக்கு இந்தப் பைத்தியம்தான் பிடித்து இருந்தது. அதன் விளைவு என்ன என்று உலகம் அறியும்.

எங்கள் தேசத்து குட்டி ஹிட்லர்களும் தவறான பாதையில் சாதியாபிமானத்தைப் பரப்பி பலதரப்பட்ட இத்தேச மக்களை ஒருவரோடொருவர் முட்டிக்கொண்டு குட்டிச் சுவராய்ப் போவதற்கு வழியுண்டாக்கி வைப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். இந்தக் குட்டி ஹிட்லர்கள் இப்படி பேதத்தையுண்டாக்கி பின்வாங்கி விடுவார்கள். மமதை கொண்ட மக்கள் ஒருவரோடொருவர் முட்டிக்கொண்டு அழிந்து போவார்கள். இதுமட்டுமல்ல, பாரபட்சமற்ற அப்பாவி ஏழைமக்களின் கதி அதோகதியாகிவிடும் சாதிபேதத்தினால் இன்று இந்தியாவில் நடைபெறும் கோர தாண்டவம் இவர்களுக்குத் தெரியாமற் போனது ஊழ் வினையா?

உண்மையிலே, இவர்களுக்கு வேண்டிய சாதியாபிமானமோ-சமயாபிமானமோ இல்லை. இவர்களுக்கு வேண்டியது, தேசத்தைப் பலிகொடுத்தாவது, தத்தமது செல்வம் செல்வாக்கை-பட்டம் பதவியை பரம்பரையாகக் காப்பாற்றிக்கொள்ளும் பேராசையேயாகும். எனவே தேச மக்கள் நிதானம் இழந்து தவறான பாதையில் செல்லாமல் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

பாதுகாப்புச் சபையில் இந்தோனேஷியப் பிரச்னை

போலந்தின் ஆலோசனை

லேக்ஸக்ஸஸ்:நியார்க், அக்.30

யுத்தத்தை நிறுத்தும்படி ஐ. நா. சபை டச்சு சர்க்காருக்குக் கட்டளையிட்டதல்லவா? "அதை இனியும் நிறுத்தாவிட்டால் டச்சு சர்க்கார் மீது பொருளாதாரத் தடை ஒன்று சர்வதேசங்களிலும் விதிக்கப்படும் என்று எச்சரிக்கும்படியாக போலந்துப் பிரதிநிதி பாதுகாப்புச் சபையைக் கேட்டுக் கொண்டார்.

"துருப்புகளை வாபஸ வாங்க வேண்டும் என்றும் இந்த ஆலோசனைகளை ஏற்று நடக்காத பட்சத்தில் இவை பலவந்தப்படுத்தி நடத்திவைக்கப்படும்" என்று கூறிவிடுமாறும் அவர் வேண்டினார்.

இப்பிரச்னை சம்பந்தமாக ஆஸ்திரேலியாவும் பிரான்சும் இந்தோனேஷியா போயுள்ள முத்தேச கமிஷனுக்கு முழு ஆதரவும் பாதுகாப்புச்சபையும் தரவேண்டும் என்று வேண்டிக்கொண்டனர். (ராய்ட்டர்)

மாத்தறை கொலை வழக்கு

இரு எதிரிகளும் விடுதலை

கொழும்பு, அக். 31

மாத்தறை டிஸ்டிரிக்டில் கொட்டகொடை பகுதியில் கடந்த வருடம் மே மாதம் 5-ம் தேதி பி. எச். உபாரிஸ் சில்வா என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை புரிந்ததாக ருகுணை பஸ போக்குவரத்து கம்பெனி டைரக்டர்களும் சகோதரர்களுமான எச். ஆர். ஜெகந்தரா, எச். ஆர். அமரதாஸா ஆகிய இருவர் மீதும் குற்றம் சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கு நேற்று அசைஸ கோர்ட்டில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு முடிவு செய்யப்பட்டது. ஏராளமான மக்கள் கோர்ட்டில் குழுமியிருந்தனர். ஜூரர்களின் ஏகமனதான தீர்ப்புப்படி நீதிபதி எதிரிகளை விடுதலை செய்தார்.

சிர
நேத்திராஞ்சனத் தைலமே
சகல வைத்தியர்களாலும் கைவிடப்பட்ட எம்மை புத்தயிர் கொடுத்து காப்பாற்றியது.

சப்தத்வு வாவிய சங்க கௌரவ காரியதரிசி திரு. வி. கார்த்திகேசு சொன்னவதாவது:

"சென்ற சில காலங்களாக சிர ரோக உபாதையினால் கண்ணிலும் கடும் வருத்தம் ஏற்பட்டு பல வித வைத்தியங்கள் செய்தும் சுகம் காணாது கடைசித் தடவையாக திரு. எம். கே. ஜெகநாதன் கண் வைத்தியரினால் வெளிவரப் பெற்ற சிர நேத்திராஞ்சனத் தைலத்தை இந்நிழமை பாவித்தமட்டில் எமது சகல உபாதைகளும் நீங்கியதுடன் எனது கண்ணுக்கும் பூரண சுகத்தைப் பெற்றேன். இத் தைலத்தின் அபூர்வ குணத்திற்கும் நிறமைக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இதன் நற்குணத்தை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்த விரும்புகிறேன்". ஒப்பம்

திரு. வி. கார்த்திகேசு
கௌரவ காரியதரிசி,
புங்குடுதீவு.

சிர
நேத்திராஞ்சனத் தைலம்

கண் புகைச்சல், குத்து, கூச்சம், மாலைக்கண், சிவப்பு முதலிய கண் சம்பந்தமான சகல ரோகங்களையும், தும்மல், நீர்வடிதல் முதலிய பீனிச வகைகளையும், கபால இடி, தலைவலி, மயக்கம், இரைமல், இளைப்பு, நரம்புத் தளர்ச்சி, மூலச்சூடு ஆகிய ரோகங்களையும் நிவர்த்தி செய்து, குளிர்ச்சியையும், ஞாபக சக்தியையும் கொடுக்கும். அஸ்மா, காசம், நீரழிவுக்கும் ஓரளவு சுகங் கொடுக்கும். காலம் நீடித்த நோயாளர்கள் நேரிலும் கடித மூலமும் விபரம் தெரிந்துகொள்ளலாம்.

விலாசம் ஆங்கிலத்தில் தெளிவாய் எழுதுக.

2 அவுன்ஸ் ரூ 51 கு. 3-25
4 ,, ,, கு. 5-50

தயாரிப்பாளர்:-
எம். கே. ஜெகநாதன்,
பூனாசி கண் வைத்தியர்,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

கட்டிடத்துக்கு
தேவையான சிமந்தும்
மற்றச்சாமான்கள் எல்லாம்
எங்களிடம் குறைந்தவிலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

என். வயித்திலிங்கம் - கொம்பனி,
No-38. மூன்றுங்குறுக்குத் தெரு,
புறக்கோட்டை, கொழும்பு.

டெலிபோன்: 2029
டெலிகிராம்: 'ENVAITLIN'

கிளை:- பெரியகடைத் தெரு,
யாழ்ப்பாணம், டெலிபோன்: 30.

பிடிச் சக்கரவர்த்தி.
த.பி.
செரக்கலால்
ராம்சேட் பீடி
2 பீடிரிங்லேபில்
சொக்கலால் ராம்சேட்
T.B. சொக்கலால் ராம்சேட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லொறி விற்பனைக்கு

சவர்வட் 2. 2½, 3, 3½ டன் லொறிகள் விற்பனைக்கு இருக்கின்றன. பொடி முதல் சகலமும் புதியது.

எம். எஸ். மென்டிஸ், 288. பஞ்சிக்காவத்தை றோட், மருதானை.

இலங்கை-இந்திய பிரச்னை விரைவில் முடிவடையும்!

ஆசிய பிரதேச தொழிலாளர் மகாநாட்டில் ஸ்ரீ கிரி பேச்சு

புதுடில்லி, நவ. 1

ஆசிய பிரதேச தொழிலாளர் மகாநாட்டின் நேற்றைய கூட்டத்தில் இலங்கையிலுள்ள இந்திய சர்க்கார் பிரதிநிதி ஸ்ரீ வி. வி. கிரி பேசுகையில் இந்தியா - "இலங்கை தொடர்புகளைப்பற்றிக் குறிப்பிட்டார். பொருளாதார அரசியல் விடுதலைக்கு இரு நாடுகளும் உழைக்க வேண்டுமென்று அவர் பேசுகையில் கூறியதாவது:-

"இன்று சுதந்திர நாடுகளாக தங்கள் தங்கள் பொருளாதார அரசியல் விமோசனத்துக்கு இருநாடுகளும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டுமென்பதை இலங்கையும் இந்தியாவும் நன்கு உணர்ந்திருக்கின்றன. இரு நாடுகளுக்குமிடையே உள்ள வேற்றுமைகளை அதிவிரைவில் முடிவு செய்ய இலங்கையின் பிரதமரும் மற்றும் அரசியல் வாதிகளும் ஆர்வம் காட்டுகின்றனர். இதனை நான் பாராட்டுகிறேன்.

"இலங்கையில் இந்தியர் தங்க விரும்பினால அவர்கள தாங்கள் இலங்கையரென்று கூறிக் கொள்வதுடன் இலங்கையின் நலத்துக்காக தொண்டாற்றி இலங்கையராகவே அவர்கள் இறக்குமவரை இருக்கவேண்டுமென்பதை மகாத்மா காந்தியும் நேருஜியும் மற்றும் இந்திய அரசியல் வாதிகளும் மிகத தெளிவாகத் தெரிவித்துள்ளனர் இலங்கை-இந்தியப்பிரச்னைகள் சுமுகமாகத் தீர்க்கப்படும் நிலைமை வரும்போது இவைகள் பற்யுறிம் முடிவுசெய்யப்படும் என்பதை நான் திடமாக நம்புகிறேன்."

"மகாநாட்டில் ஸ்ரீ கிரி தமது பிரசங்க ஆரம்பத்தில் ஆசிய நாடுகள் சுதந்திரம் அடைந்து கொண்டுளளனவென்றும் சில நாடுகள் சுதந்திர பாதையில் முன்னேறி வருகின்றனவென்றும் பொருளாதார சுதந்திரம் இல்லாத பட்சத்தில் அரசியல் சுதந்திரத்தினால் அர்த்தமேயில்லை யென்றும் இந்தியாவைப் பொறுததமட்டில உற்பத்தி, பங்கீடு, விநியோகம் ஆகியனவற்றை தேசிய மயமாக்கினாலேயே இநதியாவை எதிர்நோக்கியிருக்கும் ஆபத்துக்களில் இருந்து தப்பிக்க முடியுமென்றும், தொழிலாளருக்கும் முதலாளிகளுக்கும் இடையில் இன்று நல்ல தொடர்பு ஏறபடடுள்ளதென்றும் தேசத்தை எதிர்நோக்கயிருக்கும் ஆபத்துக்களைச் சமாளிக்கக் கூடிய விஷயங்கள்பற்றி இம் மகாநாட்டில முடிவு செயயப்படுமென தாம் நம்புவதாகவும் கூறினார்."

இம் மகாநாட்டில் இலங்கை சர்க்கார் பிரதிநிதி திரு. டி. சிவா பேசுகையில், இலங்கை சுதந்திரமடைந்ததும் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தில் நிரந்தர அங்கத்தவராக சேர்ந்துகொள்ளுமென்று தெரிவித்தார்.

இந்ய சட்டசபை மந்திரி டாக்டர் எஸ். மூக்கர்ஜி பேசுகையில், ஆசிய பிரச்னைகளை முக்கியமாக கவனிக்க இம் மகாநாடு திட்டமாக அமைக்கப்படாதுவிட்டால் சர்வ தேச ஸ்தாபனமாக இது இருப்பதில் பயனில்லை யென்றும் இந்தியாவையும் ஆசிய நாடுகளையும் பஞ்சத்தினின்றும் பாதுகாத்து செலவம கொழிக்கும் நாடுகளாக்க ஆசிய பிரச்னைகளை சரியாகத் தீர்ப்பதுடன் பிலடெல்பியா சாசனத்தை அமுலுக்குக் கொண்டுவந்து அதில் கூறப்படடுள்ளவைகளை நிறைவேற்றும்படி முடிவுசெய்ய வேண்டுமென்றும் கைத்தொழில் விவசாய அபிவிருத்திக்கு இத் தொழிலாளர் மகாநாடு மூலம் பல நாடுகளின் தொழிலாளர்-முதலாளிகள் உதவியையும் இந்தியா நாட முடியுமென்றும் இது விஷயத்தில் சர்வதேச

நுகயகொடை துப்பாக்கிப் பிரயோகவழக்கு

எதிரிக்கு விடுதலை

கொழும்பு, நவ. 1

இவ்வருடம் மே மாதம் 2-ம் தேதி நுகயகொடையைச் சேர்ந்த எஸ எம். அல்பர்ட் என்னும் அல்பர்ட் சபரமது என்பவரைச் சுட்டுக் கொலை புரிய முயற்சித்ததாக அதே இடத்தைச் சேர்ந்த திரு. ஆர். கே. சோமசுந்தரம் என்பவர் மீது குற்றம் சாட்டிக் கொண்டுவரப்பட்ட வழக்கில் சாட்சியங்கள் சரியாக இராத காரணத்தினால் கொழும்பு தெற்கு மாஜிஸ்டிரேட் திரு. டி. ஜே ஆர். குணவர்தனா எதிரியை விடுதலை செய்தார்.

சட்டப்படி ரிஜிஸ்டர் வைத்திருக்க தவறினார்

தோட்ட முதலாளிக்கு ரூ. 250 அபராதம்

பதுளை, அக். 31

சம்பள சபை சட்டப்படி ரிஜிஸ்டரை வைத்திருக்காததற்றக்துக்காக நூறளையைச் சேர்ந்த திரு டி. ஏ. செனிவிரத்தினா என்னும் தோட்ட முதலாளிக்கு பதுளை அடிஷனல் மாஜிஸ்டிரேட் திரு ஜி ஈ. அமரசிங்க ரூ 250 அபராம் விதித்தார்.

சட்டவிரோதமாக அரிசி கடத்தியதாக வழக்கு

நால்வருக்கு தலா ரூபாய் 1000 பணை

கொழும்பு, நவ. 2

வென்னப்புவா என்னுமிடத்தைச் சேர்ந்த டி. எம். டொன் வில்லியம் பீரிஸ், எச் ஆபிரகாம் அப்புஹாமி, பி. பாமுலு அப்புஹாமி, வி கணேசன் ஆகிய நால்வரும் ஒரு லொறியில் 13 மூடை அரிசியை சட்டவிரோதமாகக் கடத்திச் சென்றதாக குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிகளை தலா ரூ 1000 பிணையில் போகுமாறு விடுத்து மாஜிஸ்டிரேட் திரு. பண்டித குணவர்தனா வழக்கு விசாரணையை 10-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

வண்டியுள் அகப்பட்ட சிறுமி மரணம்

கொழும்பு, நவ. 1

கிராண்ட்பாஸ் சாப்பல் பிளேஸ் என்னுமிடத்தைச் சேர்ந்த சிலாவதி என்னும் 5 வயதுச் சிறுமி ஒரு வண்டியுள் புதன்கிழமை அகப்பட்டு பலத்த காயமடைந்ததால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தாள் நேற்று இவள் ஆஸ்பத்திரியில் மரணமானாள்.

பொது மக்கள் அபிப்பிராயத்தை திரட்ட முடியுமென்றும் கூறினார்.

தொடர்ந்து பேசுகையில் உலக ஜனத் தொகையில் சுமார் அரைப் பங்கு மக்கள் வசிக்கும் ஆசிய பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரததை உயர்த்துவதற்கு பிரதேச வாரியாக தொழிற் கமிஷன்களை நியமித்து ஆசிய பிரச்னைகளை முறைப்படி தீர்க்க முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்றும் ஜினிவாவிலும் மான்ட்ரியிலும் உள்ள சர்வ தேச தொழிலாளர் தலைமை ஸ்தாபனத்தில் ஆசிய அதிகாரிகளும் நியமிக்கப்பட வேண்டுமென்றும் கூறினார்.

சிங்கப்பூர் தொழிலாளர் பிரதிநிதி லின் ஜோ ஹொக் பேசிய பின் சீன தொழிலாளர் பிரதிநிதி லின் சென் சான் பேசினார். அவர் பேசுகையில் ஆசிய நாடுகளில் தொழிலாளர் பொது நிலைமையை வீணாக ஆராய்ந்துகொண்டிருப்பதால் பயனில்லையென்றும், சர்வதேச தொழிலாளர் மகாநாட்டு தீர்மானங்களை மிக குறைந்த காலதாமதத்தில் அமுலுக்குக் கொண்டு வர வேண்டுமென்றும் ஆசிய தொழிலாளர் தேசிய, அரசியல், பொருளாதாரத் துறைகளில் உலக தொழிலாளர்களுடன் சம அந்தஸ்து கோருவதாகவும் தெரிவித்தார். மகாநாடு ஒத்திவைக்கப்பட்டது. (அ-பிரஸ்)

ஸ்லாவாக்கிய அதிசாங்கம் ராஜினாமா

பிராண்டிஸ லாவா, அக். 31

ஸலாவாக்கிய மந்திரி சபை இன்று தனது பதவியில் இருந்து ராஜினாமா செய்தது இதற்குக் காரணம் பெரும் பான்மையரான ஜனநாயக வாதிகளுக்கு எதிராக நடைபெற்ற சில சதிகளும், கமியூனிஸ்ட் தாக்குதலும் என்று தெரிகிறது.

ஸலாவாக்கிய அரசாங்க சபா நாயகர் டாக்டர் குஸ்டாவ் ஹுளாக் என்னும் கமியூனிஸ்ட் தலைமையில் தொழிலாளர் சபைப் பிரதிநிதிகள் 1600 பேர் சமீபத்தில் கூடினர். அப்போது முழு அரசாங்கமும் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்று கோரப்பட்டது.

ஸ்லாவாக்கிய அரசாங்கம் ஒரு கூட்டு மந்திரி சபை நிர்வாகமாகும். இதில ஜனநாயக வாதிகள் பெரும்பான்மையாகவும், கமியூனிஸ்டுகள் இரண்டாவதாகவும் விளங்கினர். சோஷியலிஸ்டுகளுக்கு வெகு சொற்ப பதவிகளே இதில் இருந்தது. (ராய்ட்டர்)

பிரிட்டனில் முனிசிப்பல் தேர்தல்கள்

லண்டன், நவ. 1

இங்கிலாந்திலுள்ள 392 முனிசிப்பாலிட்டிகளில் பலர் தமது பதவிகளில் இருந்து விலகியுள்ளார்கள். இதகானமாக நடக்கும் தேர்தலில் 3000 அங்கத்தினர்கள் தெரியப்படுவார்கள்.

சமாதான நோபல் பரிசு

ஒஸ்லோ, அக். 31

நார்வீஜிய பாராளுமன்ற நோபல் சபையினர் இன்று 1947-ம் வருட சமாதான நோபல் பரிசை கீழ்க்கண்ட ஸ்தாபனங்களுக்கு வழங்கியுள்ளது. பிரிட்டனிலுள்ள நண்பர்ஸ் ஹவுஸ்களில் இயூலண்டன் மாநகரில் இருக்கிறது.

அமெரிக்காவின் ஒப் பரிசு அமெரிக்க சர்வீஸ் கமிட்டிக்கு வழங்கப்பட்டுள்ளது. (ராய்ட்டர்)

வோட்டளிப்பவர்கள் தொகை ஒரு கோடி ஐம்பது லட்சமாகும். இத்தேர்தல் இன்று இங்கு ஆரம்பமாகிறது. தேர்தல் முடிவுகள் இரவு அல்லது நாளையே தெரியவரும். (ராய்ட்டர்)

நமது ஜோஸியப் பகுதி:

தமிழகம் தமிழ் மக்களுக்கு ஏற்படுமா?

[சுகன்யா எழுதுவது]

ஜோதிட நூல்களின்படி இலங்கையின் வடபாகம் கன்னிராசியாலும், தென்பாகம் மகரராசியாலும் ஆளப்பட்டு வருகின்றது. இலங்கை, இலங்கை மக்களால் ஆளப்பட்ட காலத்தில் தமிழ் அரசர்களும் சிங்கள அரசர்களும் இராச்சிய பரிபாலனம் நடத்தி வந்திருக்கிறார்கள். தமிழ் அரசர்கள் இலங்கை முழுவதையும் ஆண்ட காலமுண்டு. அன்று தொடக்கம் இன்றுவரைக்கும் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர் காலங்களிலும், தமிழருக்கும் சிங்களவர்களுக்கும் யுத்தங்கள் நடந்து வந்திருக்கிறது. தற்சமயம் நடந்துகொண்டு இருக்கிறது. தமிழர் சிங்களவர்களுடைய ஆதிக்கத்திலிருந்து வாழ்வதற்கு தமிழரை ஆண்டு வரும கிரகமாகிய புதன் விடமாட்டார்.

நீசனாகிய சனி பகவான் சிங்கள மக்களை ஆதரித்து வருகின்றான். சனிபகவான் பொதுவுடமைக் கட்சியையும் ஆதரிக்கும் கிரகம் சனிபகவான்சோம்பல் குணங்களையும் ஆதரிக்கும் கிரகம் சென்ற மாதத்தில் நடைபெற்ற தேர்தலில் சிங்கள நாடுகளில், அதாவது இலங்கையின் தென்பாகத்தில் இடதுசாரிக் கட்சியின் அபேட்சகர் பலர் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இலங்கையின் தென்பாகத்தில் பொதுவுடமைக்கட்சி வேரூன்றும். இன்று கும்பராசியின் காலம் நடைபெறுவதால் சிங்கள மக்களும் பொதுவுடமைக் கட்சியையே ஆதரிப்பார்கள்.

இலங்கையின் வட பகுதிகளில், புதனால் ஆளப்பட்டு வரும் பகுதிகளில். இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்த அபேட்சகர்கள் தோல்வியுற்றார்கள். புதன் ஜனநாயகத்தை அடிப்படையாகக்கொண்ட கட்சியையே ஆதரிக்கும் கிரகம். புதன் கணித சாஸதிரங்களையும் ஆதரிக்கும் கிரகம். புதனே நுண்ணிய புத்திக்குரியவன் புதனின் அம்சங்களுடைய தமிழ் மக்கள் தமிழர் வசிக்கும் பகுதிகளில் வெற்றிபெற்றிருக்கிறார்கள். ஜனநாயக கட்சியை அடிப்படையாகக்கொண்ட சிங்களரும் இந்தத்தேர்தலில் தோல்வியுற்றதும் கவனிக்கத்தக்கது தமிழர் சிங்களவர்கள் ஒற்றுமைகள் இத்தீவில் ஏற்படாது.

இலங்கையின் வடபகுதிகளைப்போல இந்தியாவின் தென்பகுதியும் கன்னிராசியாலும் புதனாலும் ஆளப்பட்டு வருகின்றது. இந்தியாவும் பிரிபட்டிருக்கின்றது. தமிழன் இலங்கையை ஆளும் காலம் நெருங்குகிறது. கிரக நோக்குகளின்படி தமிழரும் சிங்களவரும் இலங்கையை ஒற்றுமையாக ஆழ்போவதில்லை. இந்தியாவைபபோல இலங்கையும் பிரிபடப்படுமெனக் கிரகங்களின் கூற்று. தமிழகம் ஒன்று ஏற்படும் போல் தோன்றுகிறது. 1948-ம் ஆண்டில் இலங்கையில் பிரிவு உண்டாகும்போல் சனி, புதன் காட்டுகின்றனர், அரசியல் கொள்கைகளிலும் தமிழர் சிங்களவர்களுக்குள் பிரிவினைகளேயுண்டாம்

இந்த வார தினப்பலன்

ஞாயிறு நவம்பர் 2 இன்று புதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கு தோஷதினம்.

சந்திரலக்னம். மேடம், மிதுனம், சிங்கம், கன்னி, தனுசு, மகர ராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் விசேஷ பலனுண்டாம்.

திங்கள்: நவம்பர் 3 இன்று பொதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கும், கொண்டாட்டங்களுக்கும், கொள்ளல் விற்றலுக்கும் பொது நாள்.

சந்திரலக்னம், மேடம், மிதுனம், சிங்கம், கன்னி, தனுசு, மகரராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினததில் சுகமுண்டாம்.

செவ்வாய்: நவம்பர் 4 பொதுக்கருமங்கள ஆரம்பிப்பதற்கும் பிரயாணங்களுக்கும் பொதுநாள்.

சந்திர லக்னம், மேடம், மிதுனம், சிங்கம், கன்னி, தனுசு, மகரராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினததில் பிரயாணங்களுக்கும் பொதுநாள்.

புதன்: நவம்பர் 5 காலை 10 மணி வரைக்கும் வியாபாரம், புதுக் கணக்கு பதிகலுக்கும், கொள்ளல் விற்றலுக்கும், பிரயாணங்களுக்கும் கொண்டாட்டங்களுக்கும் விசேஷ நாள் காலை 11-41 தொடக்கம் அஷ்டமி யாதலால் அதன் பின் எல்லாக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கும் தோஷமுண்டு. இத்தினத்தில் நீரினால் அழிவுகளுண்டாம்.

சந்திர லக்னம், இடபம், கடகம், கன்னி, துலாம், மகரம், கும்ப ராசிகளில் பிறந்தவர்களுக்கும் நற்பலனுண்டாம்.

வியாழன்: நவம்பர் 6. நவமி இன்று புதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கும் தோஷ தினம்.

சந்திர லக்னம்: இடபம், கடகம், கன்னி, துலாம், மகரம், கும்பராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் வெற்றிகளுண்டாம்.

வெள்ளி: நவம்பர் 7. இன்று புதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கு தோஷநாள்.

சந்திர லக்னம். மிதுனம் சிங்கம், கலாம விருச்சிகம், கும்பம்,மீனராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினததில் அனுகூலமுண்டாம்.

சனி: நவம்பர் 8. இன்று பொதுக் கருமங்கள் ஆரம்பிப்பதற்கும், கொண்டாட்டங்களுக்கும் பொதுநாள்.

சந்திர லக்னம். மிதுனம், சிங்கம், துலாம், விருச்சிகம், கும்பம், மீனராசிகளில் பிறந்தவர்களுக்கு இத்தினத்தில் கீர்த்தியுண்டாகும்.

களவு வழக்கில் சம்பந்தப்பட்டவர்

குதிரைப்பந்தய மைதானத்தில் காணப்பட்டாராம்

பதுளை, அக். 31

பதுளை குதிரைப் பந்தய மைதானத்தில் போலிஸார் ரோந்து சுற்றி வருகையில் ஒருவர் ஒரு போத்தல் பிருண்டியுடன் நித்திரையாக இருந்ததைக் கண்டு ஆளைக் கைது செய்து போலிஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்றனர். ஜெல்வேர்டன் எஸடேட்டில் தொழிற்சாலைப் பகுதியில் காப்பையா கங்காணி வீட்டில் வீட்டை உடைத்து ரூ 1077 மதிப்புள்ள பொருட்களைத் திருடியது சம்பந்தமாக தேடிய நபர் இவர்தானென்று கண்டுபிடிக்கப்பட்டது. இவரிடமிருந்து ரூ 283ம் சில ஜவுளி வகைகளும் மீட்கப்பட்டன. இவருடைய கையடையாளங்கள் உள்ள பல பொருள்கள் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இரு குற்றவாளிகள் மீது கொலைத் தீர்ப்பு

வெளிக்கடை ஜெயிலில் நிறைவேற்றப்பட்டது

கொழும்பு, நவ 1

நாவன்ன மீராலெப்பை என்ற சின்னச் சேனி மீது சுப்ரீம் கோர்ட்டால் விதிக்கப்பட்ட கொலைத் தண்டனை அக்டோபர் 26-ம் தேதி வெளிக்கடை ஜெயிலில் நிறைவேற்றி வைக்கப்பட்டதாக கவர்னர் ஆபீஸ அறிக்கை ஒன்று கூறுகிறது.

மீகாதெனிய கங்காணங்கே அகிரிஸ மீது விதிக்கப்பட்ட கொலைத் தண்டனை அக்டோபர் 30-ம் தேதி வெளிக்கடை ஜெயிலில் நிறைவேற்றப்பட்டது.

வெளி வந்துவிட்டது!

முத்தமிழறிவுப்போட்டி நிர் 3

தீபாவளிஸ்பெஷல்

பரிசு ரூ. 550-00

முடிவு தேதி 16-11-47

பரிசு பெற்றோர் ஜாபிதா போட்டியிற்கலந்து கொண்ட ஒவ்வொரு அன்பருக்கும் அனுப்பிவைக்கப்படும்.

விபரங்கட்கும் கூப்பன்கட்கும்:-

முத்தமிழறிவுப் போட்டி நிலையம்,

உடஹந்தன்னை, S. P. O.

MUTHAMILARIVU POTTI NILAYAM,

UDAHENTENNA., S. P. O.

"இளைஞன்"—வாசகர்களுக்கு!

"நவம்பர் 11-ம் தேதி தீபாவளி தினமாக இருப்பதை முன்னிட்டு 10-ம் தேதி இதழை அதிக பக்கங்களுடன் வெளியிட முடிவு செய்துள்ளோம். இதனால் நாளை வெளிவரும் இதழ் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதை வாசகர்களுக்கு தெரிவிக்கின்றோம்.

அதிக பிரதிகள் அச்சிட முடியாதபடியால் சந்தாதாரர்களுககும் ஏஜெண்டுகளுககும் தான் பிரதிகள் அனுப்பப்படும்.

வருட சந்தா ரூ. 5-00. தனிப்பிரதி சதம் 10.

இளைஞன் பிரசுராலயம்,

நிர். 2, கிரான்ட்பாஸ் வீதி,

கொழும்பு.

சுய அறிவுப் போட்டி நிர். 20

விசேஷ தீபாவளிப்

பரிசு ரூ. 3000-00

முடிவு தேதி 10-11-47

மதுரைத் தமிழ் பேரகராதிகள், பவுண்டன் பேனாகள் விசேஷ பரிசுகள்!

கட்டணத்தின் சலுகை!

போட்டிக் கூப்பன்களுக்கு எழுதுங்கள்; இலவசமாக அனுப்பிவைக்கப்படும். எங்கள் ஏஜெண்டுகளிடமும் கூப்பன்கள் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்கட்கு:- -

சுய அறிவு போட்டிக் காரியாலயம்,

தபால் பெட்டி நிர். 764,

Phone: 3032. கொழும்பு. T'gram: "Shuyarivu" Colombo

கஷ்டத்தையும் பணத்தையும் காப்பாற்றுங்கள்!

"குரங்கு" மரம் பிடுங்கிகள்:

மிகவும் சுலபமாக மரங்களைத் தகர்த்து எறியும்

● 5 டொன்

● 10 டொன்

பலமுள்ளவை இநப்பிலிருந்து கொடுக்கலாம்.

சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி லிமிடெட்.,

தபால் பெட்டி நிர். 46.

371, பழைய சோனகர் தெரு, கொழும்பு.

கிரவுன் தியேட்டர், மருதானை. வெற்றிகரமான 2-வது வாரம்

தினசரி மாலை 6-15 இரவு 9-30 மணிக்கும்

இன்று மெட்னி காலை 10 மணிக்கும் பகல் 3 மணிக்கும்

புத்தப் புதிய படம்!

காதிற் கினிய பாடல்கள்!

மனதை கவரும் ஆடல்கள்!

காதல் வீரம் சோகம்

இன்னும் ஒவ்வொரு வரும் விரும்பும் அத்தனை அம்சங்களும் கொண்டது

"வாமிக் அஷ்ரா"

என்னும் உன்னத ஹிந்தி பேசும் படம் காண்பிக்கப்படும்

சனி-ஞாயிறு மெட்னியில் பெண்களுக்கும், சிறுவர்களுக்கும், பால்கனிக்கும், 1-ம் வகுப்புக்கும் அரை சார்ஜ்

மதராஸில 24 வாரங்கள் வெற்றிகரமாக ஓடிய தியேட்டரில் காட்சியளித்த

பாங்கான காதல் திரை ஓவியம்

இன்று உங்களுக்குக் காட்சியளிக்கின்றது!

இடத்துக்கு முந்துங்கள்!

டெலிபோன்: நி. 3866

சிலோன் நியூஸ பேபபர்ஸ லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் நவம்பர் மாதம் 2-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன அச்சுக்கந்தோரில் அச்சிடு கொழும்பு மெயின் ஸ்டிரீட்டில இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org